# ஜனநாயகம்

என்றால் என்ன
யாருடையது
யாருக்காக
எதற்காக

ஜயதேவ உயன்கொட

ரஞ்சித் பெரேரா

தமிழில் அ. லோறன்ஸ்

# ஜனநாயகம்

என்றால் என்ன?
யாருடையது?
யாருக்காக?
எதற்காக?

ஜயதேவ உயன்கொட
ரஞ்சித் பெரேரா

தமிழில் அ.லோறன்ஸ்

# சமூக விஞ்ஞானிகள் சங்கம்

©சமூக விஞ்ஞானிகள் சங்கம்

முதலாவது பதிப்பு - 2014 ஏப்ரல்
2018 மறுபதிப்பு

**இலங்கை தேசிய நூலக சபை - வெளியீடு தொடர்பான விபரங்கள்**

**உயன்கொட ஜயதேவ**
ஜனநாயகம் : என்றால் என்ன? யாருடையது? யாருக்காக? எதற்காக?
ஜயதேவ உயன்கொட [சக] ரஞ்சித் பெரேரா : மொழி.
அ. லோறன்ஸ் - கொழும்பு : சமூக விஞ்ஞானிகள் சங்கம், 2014
ப. 45 : செமீ. 21
ISBN : 978-955-0762-20-0
i. 321.8 டிவி 23 ii. தலைப்பு :
?ஜனநாயகம்

**அட்டை** - மு.நிரோசன்

**அச்சுப்பதிவு / பக்கவமைப்பு**
நயோமி ராஜபக்ச / சந்திரிக்கா விதானபத்திரன

**வெளியீடு**
சமூக விஞ்ஞானிகள் சங்கம்
12 சுலைமான் டெரஸ், கொழும்பு 05
கனேடிய சர்வதேச அபிவிருத்தி ஆய்வு ஒத்துழைப்பு மையத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டது.

Printers : Impressions Printers
119, Subhadrarama Road,
Gangodavila, Nugegoda.

Published by Social Scientists' Association,
With assistance from International Development Research Centre (IDRC), Ottawa, Canada

SSA -IDRC - CRDI

# முதலாவது பதிப்பிற்கான முன்னுரை

சமூக விஞ்ஞானிகள் சங்கத்தின் மாற்றுக் கல்விக்கான நிலையத்தின் "சமாதான வெளியீடுகளின்" வரிசையில் மேலும், ஒரு வெளியீடாக "ஜனநாயகம்" என்ற பிரசுரம் வெளிவருகின்றது.

"ஜனநாயகம்" என்ற அரசியல் தத்துவத்தையும், அரசியல் நடைமுறையையும் மிக இலகுவாக அறிமுகப்படுத்தி, ஜனநாயகத்தின் பல பக்கங்களையும் ஆராய்வது, இந்த பிரசுரத்தின் நோக்கமாகும். இலகுவானதாகவும், வாசகர்களின் நன்மைகருதியும், எழுதப்பட்டுள்ள இப்பிரசுரம், சில கொள்கை ரீதியான, கோட்பாட்டு ரீதியான விடயங்களை சுருக்கமாக அறிமுகப்படுத்துகின்றது. ஜனநாயகத்தின் தொடர்ச்சியான, தேவைப்பாடும், சமூகத்திற்கான தேவைப்பாடும் இப்பிரசுரம் முழுவதிலும் வெளிப்படுகின்றது.

இந்த சமாதான கல்வி வெளியீட்டு தொடரின் நோக்கம், இந்நாட்டு மக்களின் ஜனநாயக இயலுமையை பலப்படுத்தி, அவர்களுக்கு அறிவு பூர்வமாக, பங்களிப்பு செய்வதாகும். சமாதான கல்வி வெளியீட்டுத் தொடரின், இந்த சிறு பிரசுரத்தை வெளியிடுவதற்கு உதவிய, கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்திற்கும் (CIDA) நிதியமைச்சின் கீழ் இயங்கும், தேசிய ஒருங்கிணைப்பு வேலைத்திட்டப் பிரிவிற்கும், (NIPU) எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஜயதேவ உயன்கொட
மாற்றுக் கல்வி நிலையம்
சமூக விஞ்ஞானிகள் சங்கம்,
ஆகஸ்ட் 2006.

## இரண்டாவது பதிப்பிற்கான முன்னுரை

2006 ஆகஷ்ட் மாதம் 'ஜனநாயகம்' நூலின் முதலாவது பதிப்பினை வெளியிட்டோம். பல சிவில் அமைப்புக்களால் சமூக அரசியல் கல்வி நடவடிக்கைகளுக்காக இப்பிரசுரம் உபயோகப்படுத்தப்பட்டது. வாசகர்களால் விரும்பி வரவேற்கப்பட்ட இந்நூலின் இரண்டாவது பதிப்பை இப்போது வெளியிடுகின்றோம். இம் மறுபதிப்பு மூலம் கல்வித் தேவையை நிறைவு செய்கிறோம்.

விரிவுப்படுத்தப்பட்ட, இந்த பிரசுரத்தில் பல புதிய விடயங்கள் சேர்கக்ப்பட்டுள்ளன. நூலின் தலைப்பிலும் ஜனநாயகம் என்ற கருத்து **"ஜனநாயகம்" என்றால் என்ன? யாருக்காக? யாருடையது? எதற்காக?** என்று மிக பொருத்தமான வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

திருத்திய இப்பதிப்பை வெளியிடுவதற்கு, வழங்கப்பட்ட கனேடிய சர்வதேச அபிவிருத்தி ஆய்வு ஒத்துழைப்பு மையத்தின் (IDRC) உதவியை நாம் பெரிதும் மதிக்கின்றோம்.

**ஜயதேவ உயன்கொட**
**மாற்றுக் கல்வி நிலையம்**
**சமூக விஞ்ஞானிகள் சங்கம்**
**ஆகஸ்ட் 2010.**

## மொழியாக்கம் தொடர்பான சில வரிகள்.....

ஜனநாயகம் என்றால் என்ன? யாருடையது? யாருக்காக? எதற்காக? என்ற பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட, ரஞ்சித் பெரேரா ஆகியோரால் எழுதப்பட்ட இந்நூல், என்னால் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. முடிந்தவரை எளிமையாகவும் கருத்து மாற்றங்கள் ஏற்படாத வகையிலும் இதனை மொழிபெயர்த்துள்ளேன்.

ஜனநாயகம் என்றால் மக்களால், மக்களுக்காக மக்கள் நடத்தும் பெரும்பான்மை ஆட்சி முறையே என்று கூறப்படுவதுண்டு. ஜனநாயகமென்பது பெரும்பான்மை ஆட்சி மட்டுமன்று, அது பல்லின சமூகத்தில் பல்லின சமூகங்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான ஆட்சி முறையும் ஆகும். இந்நூலின் தமிழ் மொழியாக்கம் பல்லின சமூக அமைப்பைக் கொண்ட இலங்கையில் தமிழ் மக்களுக்கு அவர்களின் அரசியலறிவை உயர்த்துவதற்கு உதவுமென நம்புகின்றேன்.

அ.லோறன்ஸ்,
மொழிபெயர்ப்பாளர்.

# ஜனநாயகம் என்றால் என்ன?

"ஜனநாயகத்தை அறிமுகப்படுத்துவோம்" என்ற தலைப்பில் 1988ம் ஆண்டு யுனஸ்கோ நிறுவனத்தால் வெளியிடப்பட்ட சிறு பிரசுரம், ஜனநாயகம் என்பது எமது அன்றாட வாழ்க்கையின் ஒரு அங்கம் என்பதை வலியுறுத்தியே ஆரம்பமாகின்றது. அப்பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளது போன்று நாம் சமூகவாழ்க்கையின் போது பல நிறுவனங்களிலும், குழுக்களிலும் உறுப்பினர்களாக உள்ளோம். குடும்பம் இத்தகைய ஒரு நிறுவனமாகும். பல்வேறு வகைக் குழுக்களும், பிரிவுகளும் உள்ளன. இனம் என்பது ஓர் பிரிவாகும். நாடு என்ற பிரிவுக்குள்ளும் உட்படுகிறோம். இவற்றுள் சில சிறியன, சில மிகப் பெரியன. இவற்றின் குறிக்கோள் செல்நெறி, சட்டதிட்டங்கள், பொறுப்பு ஆகியன பற்றி நாம் உறுப்பினர்கள் என்ற வகையில் பல தீர்மானங்களை எடுக்க வேண்டி ஏற்படுகிறது.

இவ்விதமான தீர்மானங்கள், கூட்டுத் தீர்மானங்களாகவோ தனித் தீர்மானங்களாகவோ இருக்கலாம். ஜனநாயகம் என்பது அடிப்படையில் கூட்டுத் தீர்மானம், என்ற தளத்திற்குரியதாகும். ஒரு அமைப்பின் அங்கத்தவர்கள் சகலரும், எடுக்கும் தீர்மானம் அம்முழு அமைப்பிற்குமே பாதிப்பை ஏற்படுத்துவதால், அந்த அமைப்பின் சகல அங்கத்தவர்களுக்கும் தீர்மானம் எடுப்பதற்கான சமத்துவ உரிமை இருக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஜனநாயகம் இரண்டு அடிப்படையான அம்சங்களின் அடிப்படையில் அமையும். சகலரினதும், நிருவாகத்தின் கீழ் கூட்டாக தீர்மானம் எடுப்பது. அந்த நிருவாகத்தை நடைமுறைப்படுத்துவதில், சகலருக்கும் சமமான உரிமையோடு செயல்பட அனுமதிப்பது.

ஜனநாயகத்தை மேலே குறிப்பிட்டுள்ள, விதத்தில் விளங்கிக் கொள்வதன் மூலம், ஒன்று தெளிவாகத் தெரிகின்றது. நம்மில் அதிகமானோர் நினைக்கின்ற, விதத்தில் ஜனநாயகம் என்பது வெறுமனே அரசு, அல்லது அரசாங்கத்தோடு மட்டும் சம்பந்தப்பட்ட நடைமுறை என்பதல்ல. ஜனநாயகம் எந்த நிறுவன அமைப்பு முறைகளுக்குள்ளும், கூட்டுத் தீர்மான அடிப்படையிலேயே நடைபெறுகின்றது. ஜனநாயகம் என்பது இப்படித்தான் அமையும் என்று வரையறுத்து கூறக்கூடிய தத்துவமன்று, அது ஒரு ஒப்பீட்டு கண்ணோட்ட மாகும். அங்கு ஜனநாயகம் எந்த மட்டத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது? அரசியல் சமத்துவம், சகலருக்குமான நிருவாகம், எந்தளவு தூரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.? கூட்டு தீர்மானம் எடுப்பதில் எல்லோரினதும் சம பங்களிப்பு காணப்படுகின்றதா? போன்ற காரணிகளே முக்கியமாக கணிக்கப்படுகின்றது.

ஒரு நாட்டில் ஜனநாயகம் என்பது அந்நாட்டு அரசாங்கம், அந்நாட்டு மக்களுக்கு, பொறுப்பு கூறுவதாகும் என்று நாம் நினைக் கின்றோம். நாட்டு மக்களின் சமூக, அரசியல் உரிமைகளை சட்டபூர்வமான முறையில், பாதுகாப்பதற்கு அரசாங்கங்கள் தயாராக, இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகவே, ஜனநாயக மயமாக்கல் என்ற நடைமுறையில், நாம் செய்ய வேண்டிய வேலைகள் ஒரு நாளும் முடிவடை வதில்லை.

ஆகவேதான் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கும், பாதுகாப் பதற்கும், அதனை விஸ்தரிப்பதற்கும் ஜனநாயக வாதிகள் பூலோக ரீதியில் போராட்டங்களில், ஈடுபடுகின்றனர். தமக்கு உயிராபத்து நிலவும் நிலையிலும், மனிதர்கள் இந்த போராட்டங்களில், ஈடுபடுவது இந்த காரணங்கள் நிமித்தமாகும். ஜனநாயகம் என்பது ஒரு விடயமல்ல, அது பலவிடயங்களைக் குறிக்கிறது. அது ஒரு அரசியல் பார்வையாகும். அரசியல் தத்துவமாகும். அரசியல் சிந்தாந்தமாகும். அரசாங்க முறைகளில் ஒன்றாகும். அது அரசின் நிச்சயமான வடிவம் என்றும் கூறலாம். ஜனநாயகம் என்பது ஒரு அரசியல், சமூக, ஒழுக்க, அடிப்படை நடைமுறை என்றும் வரை யறுக்கலாம். அது ஒரு அரசியல் கலாச்சாரம் என்றும் குறிப்பிடலாம். ஜனநாயகம் என்பது சமூக வாழ்க்கை, தனிமனித தொடர்பு போன்றவற்றை வடிவமைக்கும் ஒரு பெறுமதி மிக்க படிமுறையாகும். வீடு, பாடசாலை, வேலைத்தலம், பல்கலைக்கழகம், அலுவலகம், பஸ் போன்ற இடங்களில் எமது நடத்தை ஜனநாயக விழும்மியங்களுக்கேற்ப, பண்படுத்தப்பட்டதாக இருந்தால் அது நாம் நாகரீகத்தில் உயர்மட்டத்தை அடைந்துள்ளோம் என்பதற்கு ஒரு சாட்சியாக அமையும்.

## நாம் ஏன் ஜனநாயகத்தை மதிக்க வேண்டும்?

இந்த விடயம் தொடர்பாக, நாம் ஆராயும் போது, "ஜனநாயகம் என்பது" சமூக, அரசியல் மதீப்பீட்டு படிமுறையாக நோக்கப்பட வேண்டும். **ஜனநாயகத்தின் குறிக்கோள் சகல மக்களையும், தனி மனிதர்களாகவும், குழுக்களாகவும், சரிசமமாக நடத்துவதாகும்.** ஜனநாயக முறைக்கு முன்பு, நிலப்பிரபுத்துவ ஆட்சி முறை காணப்பட்டது. சில மனிதர்களின் வாழ்க்கை இயற்கையாகவே, ஏனைய மனிதர்களின் வாழ்க்கை யை விட, மதிப்பு வாய்ந்தது என்ற கருத்து ஒரு காலத்தில் மிக ஆழமாக வேரூன்றியிருந்தது. Every one to count for one and none for more than one. "சகலரும் ஒரே விதமாகவே, கணிக்கப்பட வேண்டும்.ஒருவர் பிறர் ஒருவரைவிட, வித்தியாசமாக உயர்வாக கணிக்கப்படக் கூடாது" என்பது ஜனநாயகம் பற்றிப் பிரபலமாக முன்வைக்கப்படும் ஒரு கருத்தாகும்.

## 02

ஜனநாயகக் குரல் என்பது சொத்துரிமையாளர்களினதும், பணக்காரர்களினதும் குரல் மாத்திரமல்ல, அது சொத்தில்லாதவர்களின் குரலுமாகும். "பொதுமக்கள் அவ்வளவு புத்திசாலிகள் அல்ல. கல்வி அறிவுள்ளவர் அல்ல. அவர்கள் தூர நோக்குள்ளவர்கள் அல்ல" என்று கூறி எப்பொழுதுமே பொது மக்களை "ஜனநாயக விமர்சர்கள்" பொதுக் கொள்கைகள் தொடர்பாக, தீர்மானம் எடுக்கும் நடைமுறையிலிருந்து, எப்போதும் தூர ஒதுக்கி வைக்கவே முயற்சித்துள்ளனர். பொதுமக்களுக்கு போதியளவு தகவல்கள் கிடைத்தால், தீர்மானிப்பதற்கும், தெரிவு செய்வதற்கும் போதிய கால அவகாசம் கிடைத்தால், தேவையான சந்தர்பத்தில், அவர்கள் பொறுப்புடன் செயற்படுவர். அவர்களிடம் திறமையுள்ளது என்பதே நாம் ஜனநாயக ரீதியாக கொடுக்கக் கூடிய பதிலாகும். மனிதர்கள், வர்க்கம், சாதி, கல்வியறிவு. செல்வம், சொத்து மற்றும் பாலியல் தன்மை என்ற எந்தவித பாகுபாடும் இல்லாமல் சமமானவர்கள், சமத்துவமான, மதிப்புள்ள தனிமனிதர்களாக, மதிக்கப்பட வேண்டுமென்பதே, ஜனநாயகத்தின் மிக அடிப்படையான கருத்தாகும்.

**ஜனநாயக ஆட்சி முறையானது (அரசாங்க முறையானது) வேறு எந்த ஆட்சி முறையைக் காட்டிலும் சிறந்த முறையில் சாதாரன மக்களின் தேவையை நிறைவேற்றுகின்றது.** அரச கொள்கை, அது எடுத்துச் செல்லப்படும் முறை, அதன் செல்நெறி தொடர்பாக, பொது மக்கள் கலந்துரையாடும் போது, அம்மக்களின் கவனமும், அவர்களின் எதிர்பார்ப்பும் அதில் வெளிப்படுகின்றது. "செருப்பு தைப்பவனின் கடமை செருப்பு தைப்பதுதான், ஆனால் செருப்பு காலை கடிக்குமா? என்பது அந்த செருப்பை அணிந்திருப்பவர்களால் தான் உணர முடியும்" என்று ஒரு பழைய மக்கள் வழக்காறு கூறும். அரசாங்கம் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் போது, அதன் பிரதி பலன்களை அல்லது விளைவுகளை, அனுபவ ரீதியாக அனுபவிப்பவர்கள் பொதுமக்களே. ஆகவே, அரச கொள்கைகளில் பொது மக்களின் அனுபவம் வெளிப்பட வேண்டுமானால், அந்த கொள்கைகளில் பொது மக்களின் உணர்வுகளும், தாக்கமும் வெளிப்பட வேண்டும். அரச நிருவாகத்தை கொண்டு நடத்துகின்றவர்கள், மக்களின் தாக்கத்தையும், அவர்களது தலையீட்டையும், தமது ஆட்சியில் தடுப்பார்களேயானால், அவ்விதமான ஆட்சியாளர்கள், அம்மக்களின் தேவைகளை நிறை வேற்றுவதற்கு பொருத்தமற்றவர்களாவர். அவர்கள் இறுதியாக, ஊழல் மிக்க ஆட்சியாளர்களாகவும், தமது மடியை நிரப்பி கொள்கின்றவர்களாகவுமே இருப்பர். ஜனநாயகத்திற்கு மக்களின் அரசியல் பங்களிப்பும், பொறுப்பு

கூறுதலும், மிக அடிப்படையான அம்சங்களாகும். மக்களை அறிவற்றவர் களாகவும், கல்வியற்றவர்களாகவும் பார்க்காமல், மக்களே ஜனநாயகத்தின் அடிநாதமானவர்கள் என்று கணிப்பிடுவது, ஜனநாயகத்தின் மிக அடிப் படையான அம்சமாக விளங்கும்.

03

**திறந்த வாத விவாதங்கள், கருத்து பரிமாறல்களை ஊக்குவித்து, தீர்வு காண்பதிலேயே ஜனநாயகத்தின் அடிப்படை தங்கி நிற்கின்றது.**

ஜனநாயகத்தின் கீழ் வாத விவாதங்களுக்கு கூடுதலான முக்கியத்துவம் செலுத்தப்படுகிறது. ஜனநாயகக் கொள்கை தொடர்பாக, மாறுபட்ட கருத்துக்களையும், அது தொடர்பான விருப்பு வெறுப்புக்களையும் வெளியிடுவதற்கும் அந்த மாறுப்பட்ட கருத்துக்களைச் செவிமடுப்பதற்கும் உரிமையுள்ளது என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் ஜனநாயக சமூகத்தில் சமத்துவமாக வாழும் மக்களிடையே வேறுபாடுகளும், பன்மைத்துவமும் மட்டுமன்றி சமத்துவமான தத்துவமும், கருத்துக்களும் காணப்படுவது தெரிகின்றது. வேறுபாடுகள் ஏற்படும் போது, அங்கு கருத்து முரண்பாடுகள் ஏற்படுகின்றன. அவ்வாறான முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகள் ஜனநாயக முறையினூடாக தீர்க்கப்பட வேண்டும். மேலிருந்து பிரயோகிக்கும் அதிகார பலாத்காரத்தின் ஊடாகவன்றி, கலந்துரையாடல், ஊக்குவித்தல் மற்றும் ஒருமைப்பாட்டின் மூலம் கருத்து முரண்பாடுகளை தீர்த்துக்கொள்வது என்பது ஜனநாயக விதிமுறையாகும்.

ஜனநாயகம் என்பது "பேச்சுக்கடை" என்று பொதுவாக இகழ்ச்சிக் குட்படுத்தப்படுகின்றது. ஆனாலும், வெளிப்படையாக வாத விவாதங்கள் செய்யும் திறமை ஒரு நற்பண்பாகும். அதனை ஒரு தீய பண்பாக கருத முடியாது. ஏன் என்றால், கொள்கை தொடர்பான விருப்பு வெறுப்பான கருத்துக்களைத், தெரிந்துகொள்வதற்கான வழிமுறை அது ஒன்றேயாகும். வேறுபாட்டிற்கு இடமளிப்பது மாத்திரமன்றி, மாற்றுக் கருத்துக்கு இடமளிப்பதுடன், அது தொடர்பாக ஊக்குவிக்கும் ஒரே "அரசியல் சட்டகம்" ஜனநாயக முறையாகும். வேறுபாடு என்பது அல்லது வேற்றுமை என்பது மாறுபட்ட கருத்தை கொண்டிருப்பதாகும். நடைமுறையிலுள்ள, ஆட்சி செலுத்துகின்ற அல்லது பெரும்பான்மை கருத்துக்கு மாறுப்பட்ட கருத்தை கொண்டிருப்பதாகும். வேறுபாட்டிற்கான அல்லது மாற்றுக் கருத்துக்கான உரிமையை ஏற்றுக்கொள்ளாத சமூகம் ஒரு ஜனநாயக சமூகமாகாது.

**ஜனநாயகத்தில் அடிப்படை சுதந்திரம் உறுதிப் படுத்தப்படுகின்றது.**

சமூகத்தில் நிலவும், அபிப்பிராய பேதங்கள் மற்றும், வாதவி வாதங்களை, கருத்து வெளியிடுதல் போன்றவற்றை தீர்த்துக் கொள்வதற்கான, ஒரே மார்க்கம் கலந்துரையாடல் அல்லது பேச்சுவார்த்தையாகும். இருந்தாலும், சுதந்திரமான கருத்து வெளியிடல், பேச்சுரிமை, ஒருவருக்கு தன்னை தாற்காத்துக் கொள்ளும் உரிமைப் போன்ற அரசியல் மற்றும் சிவில் உரிமை பிரகடனத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள, அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படாவிட்டால், வெளிப்படையான கருந்துரையாடல் அல்லது பேச்சுவார்த்தைகளால் பயன்கிட்டாது. மக்களின் அடிப்படையான.

04

இருப்பிற்கு மேற்கூறிய உரிமைகள் அத்தியாவசியமானது என்பதுடன் அவை ஜனநாயகத்தினுள் சிறப்பாக பாதுகாக்க வேண்டும். இந்த உரிமைகளால், தனிமனிதர்களிடத்தில் ஆற்றல் விருத்தி ஏற்படுவதுடன், வாத விவாதங்களுக்கு முகம் கொடுப்பதன் மூலம், கூட்டுத் தீர்மானங்களுக்கு உட்படும் தனிமனிதத் திறமையும் விருத்தியடைகின்றது.

**ஜனநாயக வழிமுறையை மாற்றி முன்னேறிச் செல்வதற்கு இடமளிக்கின்றது.**

ஜனநாயக நடைமுறையை பின்பற்றுகின்ற நாடுகளில், ஆட்சி மாற்றத்திற்கு வழியுள்ளது. ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் கொள்கைகள் பயனற்றனவாக இருக்கும் போதும், அரசாங்கம் மக்களுக்கு பயன்படும் வகையில் செயலாற்றத் தவறும் போதும் ஆட்சியை மக்கள் மாற்ற முடியும். பலாத்காரமற்ற வகையில் அதி தீவிர, போராட்ட முறைகளை மேற்கொள்ளாத வகையில், ஆட்சியை மாற்றுவதற்கு மக்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. அரசியல், கலாச்சாரம், அரசியல் அமைப்பு நடைமுறை என்ற வகையில், ஜனநாயக முறைக்கே உரித்தான இரண்டு குணாம்சங்கள் உள்ளன. அதில் முதலாவது மக்களை ஆட்சி செய்கின்ற ஒரு அரசாங்கத்தின் ஆட்சிக் காலம் ஒரு குறிப்பிட்ட குறுகிய காலப்பகுதியாகும். சாதாரணமாக ஐந்து வருடங்கள் என்று சொல்லப்படுகின்றது. இந்த காலத்தை விட மேலும் ஆட்சியிலிருக்க வேண்டுமானால் வாக்கு பலத்தின் ஊடாக ஆட்சி அதிகாரம் உள்ள மக்களின் அங்கீகாரத்தை அல்லது அனுமதியை பெறவேண்டும். இரண்டாவதாக ஆட்சி மாற்றம் பலாத்காரமற்ற முறையில் ஏற்படவேண்டும். துப்பாக்கி ஏந்திப் போராடுதல் ஆட்களை படுகொலை செய்தல், சிறைப் பிடித்தல் போன்ற வன்முறைகள் இல்லாத ஆட்சி மாற்றமாக இருக்க வேண்டும்.

## ஆட்சி முறையின் தன்மையாக ஜனநாயகம்

நாம் ஜனநாயக முறையென்று கூறும் போது சில முக்கிய அம்சங்கள் இருக்க வேண்டும் எனக் கருதுகிறோம். சுதந்திரமான தேர்தல், பலகட்சி முறை, பத்திரிகைச் சுதந்திரம், ஸ்தாபனங்களிலும் சங்கங்களிலும் சேரும் உரிமை, தேர்தல் மூலம் ஆட்சி மாற்றம் என்பன இவற்றுள் சிலவாகும். இவைதான் உலகில் பரந்தளவில் உள்ள மக்களால் அடையாளப் படுத்தப்பட்ட, அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, அரசியல் தத்துவமான, "ஜனநாயகம்" என்பதற்குறிய அடிப்படையான பிரதான அம்சங்களாகும்.

விசேடமாக ஆட்சி முறை என்ற அடிப்படையில் ஜனநாயக ஆட்சி முறைக்கு நீண்டதொரு வரலாறு கிடையாது. அது 17ம் நூற்றாண்டு நடுப்பகுதியில் ஐரோப்பாவில் தோன்றிய ஒன்றாகும். அது முதலாவதாக ஆரம்பித்தது பிரித்தானியாவிலாகும். அது தான்தோன்றித்தனமான எதேச்சதிகாரத்திற்கு, ஒரு மாற்று ஆட்சி முறையாக முன்னணிக்கு வந்தது. இறைமையானது அரசனுக்கல்ல, அது பொதுமக்களுக்கே உரித்தானது. ஆட்சியாளர் என்பவர்கள் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட

05

நபர்கள் ஆவர். ஆட்சியாளருக்கும், மக்களுக்குமிடையிலான தொடர்பு ஒரு ஒப்பந்தத்தால் உருவானது. மக்களின் அங்கீகாரமின்றி, அந்த சமூக ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறுவதற்கு ஆட்சியாளர்களுக்கு உரிமை கிடையாது. அந்த ஒப்பந்தங்களை மீறும் ஆட்சியளர்களை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்கு மக்களுக்கு அதிகாரம் உள்ளது. அரசாங்கத்திற்கு மக்களால் வழங்கப்பட்ட, வரையறைக்குட்பட்ட அதிகாரம் உள்ளது என்ற அடிப்படையிலேயே இந்த மாற்று ஆட்சி முறை வடிவமைக்கப்பட்டது. தாராள ஜனநாயகம் என்று சொல்லப்பட்ட நவீன பிரதிநித்துவ ஜனநாயக முறை இந்த வகையிலேயே ஏற்படுத்தப்பட்டது. தாராள ஜனநாயகம் என்று தொடங்கப்பபட்டது, மேற்படி அம்சங்களை கொண்ட ஜனநாயக முறையேயாகும்.

### ஜனநாயகத்தின் வரலாற்றுப் பின்புலம்

மேலே பிரதிநிதித்துவ ஜனநாயக முறைக்கு ஒரு நீண்ட வரலாறு கிடையாது எனப் பார்த்தோம். அது 18ம் 19ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், தோன்றிய ஸ்தாபன மயப்பட்ட ஒரு ஆட்சி முறையாகும். அதற்கு முன்பு இதுப்பற்றி நாம் புராதான கிறிசில்

கேள்வி பட்டிருக்கின்றோம். இருந்தாலும், அங்கு பிரதிநிதித்துவ ஜனநாயகம் காணப்படவில்லை. நேரடி ஜனநாயகமே காணப்பட்டது. அதன் அர்த்தம் மக்கள் நகரசபையில் கூட்டம் கூடி கருத்துரைகள் நடத்தி, வாத விவாதங்கள் செய்து, ஒரு பொது விடயம் தொடர்பாக முடிவுக்கு வருவதை குறிப்பிடுகின்றது. கோவில்களிலும், பன்சலைகளிலும், கிராம அபிவிருத்தி கூட்டங்கள் நடத்துவதும், இம்மாதிரி நேரடி ஜனநாயகத்தின் ஒரு நடைமுறையாகும். நடைமுறையில் நேரடி ஜனநாயக முறை இன்னும் வழக்கொழிந்து விடவில்லை என்பது இதன் மூலம் தெரிகின்றது

ஐரோப்பாவில் முதலாளித்துவ சமூக பொருளாதாரத்துடன், தாராள ஜனநாயகம் தொடர்புப்பட்டு, தோற்றம்பெற்று வளர்ச்சி பெற்றது. தாராள வாதம் என்பது ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற ஒரு முதலாளித்துவச் சிந்தனை, என்று மார்க்சிய வாதிகள் கூறுவதிலும் உண்மை இருக்கின்றது. தனிமனித சுதந்திரம், தனி சொத்து தொடர்பான சுதந்திரச் சந்தை, அரசியல் போட்டா போட்டி போன்றவை நிலப்பிரபுத்துவ ஆட்சி முறைக்கும், மன்னர் ஆட்சி முறைக்கும் எதிராக தோன்றிய முதலாளித்துவ வர்க்கத்தின் முதலாளித்துவ சிந்தனையின் ஒரு பகுதியாகும். தாராள ஜனநாயகத்தை (லிபரல் ஜனநாயகத்தை) அடையாளப்படுத்துவதற்கு "முதலாளித்துவ ஜனநாயகம்" என்ற சொல்லை மார்க்சிய வாதிகள் உபயோகிப்பது, இந்த வரலாற்று பின்னணியையும், நவீன ஜனநாயகத்தின், சமூக பொருளாதார பின்னணிகளையும் அடிப்படையாகக் கொண்டதுதான் என்பது தெளிவாகின்றது.

## 06

ஐரோப்பா அல்லாத நாடுகளில், இந்த ஜனநாயகம் பரவியது அந்நாடுகள் ஐரோப்பாவின் காலனிகளாக இருந்தகாலகட்டத்தில்தான். காலனிகளுக்கு சொந்தக்காரர்களாக இருந்த பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளின், அமைப்புமுறை ஜனநாயக முறையை கொண்டிருந்தாலும், அவர்கள் தமது காலனிகளில் (குடியேற்ற நாடுகளில்) நடத்தியது ஜனநாயக ஆட்சி முறையல்ல, ஏகாதிபத்திய ஆட்சி முறையாகும். அதனால்தான் "காலனித்துவ ஜனநாயகம்" என்ற சொல் அரசியல் கலைச்சொல்லகராதியில் இடம்பெறவில்லை. காலனித்துவ நாடுகளில், அரசியல் ஜனநாயகம் கட்டியெழுப்பப்பட்டது, அவை காலனித்துவ ஆட்சி முறையிலிருந்து விடுபட்ட பிறகுதான்.

காலனித்துவப் பின்னணியில், ஜனநாயக அரசியலை ஏற்படுத்துவதில் "காலனித்துவ எதிர்ப்பு போராட்டம்" ஒரு முக்கிய அரசியல் நோக்கமாக இருந்தது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். " ஜனநாயக அரசியல்"

என்பதனால் எதைக் கருதுகிறோம்? பிரதிநிதித்துவ பாராளுமன்ற ஆட்சி முறை, வாக்களிக்கும் உரிமை, பல கட்சி முறை, குடியியல் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்துகின்ற, சிவில் அரசியல் தலைமையின் கீழ் இயங்கும், ஆட்சி முறை போன்றவையே இங்கு கருத்தில் கொள்ளப் படுகின்றது. ஜனநாயகத்திற்கான போராட்டத்தில் 17வது நூற்றாண்டில் அமெரிக்காவில் ஏற்பட்ட சுதந்திரப் போராட்டம், காலனித்துவ எதிர்ப்பு போராட்டத்திற்கான சிறந்த உதாராணமாகும். அண்மைக்கால உதாரணமாக 1971ம் ஆண்டு பங்களாதேசில் பாராளுமன்ற ஜனநாயகத்தை ஏற்படுத்து வதற்கான சுதந்திர போராட்டத்தை குறிப்பிடலாம். நேபாளத்தில் அரச எதிர்ப்பு போராட்டம், மன்னர் ஆட்சிக்கு மாற்றீடாக, பாராளுமன்ற ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தியமை மற்றுமொரு உதாரணமாகும்.

நவீன ஜனநாயகம் வெறுமனே "முதலாளித்து ஜனநாயகம்" என்று அதனை ஒதுக்கி வைப்பது ஜனநாயக முறையின் சில தீய பண்புகளை விலக்க வேண்டும் என்பதற்காக அதன் பல நன்மைகளையும் பொருட்படுத்தாமல் விடுவது "குழந்தையைக் குளிப்பாட்டிய நீருடன் சேர்த்து வீசுதல்" என்ற செய்கைக்கு ஒப்பானது. பிரதிநிதித்துவ ஜனநாயகமும், வாக்கு பலமும், ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கான சமூக, அரசியல் விடுதலைக் கான ஒரு கருவியாக, உலகில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களால், பயன்படுத்த படுகின்றன இலங்கையை நாம் உதாரணமாக கொண்டோமே யானால், 1929ம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தக்குழு, இலங்கைக்கு அரசியல் சீர்திருத்தம் வழங்க முன் வந்தபோது, சர்வஜன வாக்குரிமைக்காக போராடியவர்கள், தொழிலாளர் வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்திய தொழிற்சங்கங்கள், பெண்கள் விடுதலை அமைப்புகள், தாழ்த்தப்பட்ட மக்களை பிரதிநிதித்துவ படுத்திய அமைப்புக்கள் என்பனவாகும்.

07

சிங்கள, தமிழ் முதலாளித்துவ அரசியல் தலைவர்கள் சர்வஜன வாக்குரிமை கொடுப்பதற்கு எதிராக செயல்பட்டனர். அவர்கள் ஏழைகளுக்கும், படிப்பறிவு குறைந்தவர்களுக்கும், பெண்களுக்கும் வாக்குரிமை வழங்குவது, அழிவுக்கு வழிவகுக்கும் செயலாகும் என்று கூறினர். ஆனால் ஒடுக்கப்பட்ட மக்கள், சர்வஜன வாக்குரிமையை நாட்டின் ஆட்சியில், கொள்கை வகுப்பதில், தமக்கு தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்ற வகையிலும், தாமே ஆட்சியாளர்களை தெரிந்தெடுப்பதற்கான சந்தர்ப்பம் தமக்கு கிட்டுவதாக இதனை நோக்கினர்.

1960களில் அரசியலில் இன்னுமொரு உதாரணத்தை நாம் குறிப்பிடலாம். அந்நேரத்தில் 21 வயதுக்கு மேற்பட்ட குடிகளுக்கே சர்வசன வாக்குரிமை இருந்தது. சர்வசன வாக்குரிமைக்குத் தகுதி பெறும் வயதை 21 வயதிலிருந்து 18 வயதாக குறைப்பதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியும், இடதுசாரி கட்சிகளும் ஒரு யோசனையை முன்வைத்தபோது, ஐக்கிய தேசிய கட்சி அந்த யோசனையை, "குரங்கு கையில் பூமாலையை கொடுத்த தற்கு ஒப்பாகும்" என்று அடையாளப்படுத்தியது. ஆனால் இளைஞர்களுக்கு வாக்குரிமையை பெற்றுக்கொடுப்பது ஜனநாயகத்தை மேலும் விஸ்தரிப் பதற்கான ஒரு நடவடிக்கையாகும். இந்த கலந்துரையாடல் மூலம் நாம் வரக்கூடிய முடிவு என்னவென்றால், ஜனநாயகம் சம்பந்தப்பட்ட கண்ணோட்டம் ஐரோப்பாவில் முதலாளித்துவ எழுச்சியோடு, அரசியல் மாற்றத்தினால் ஏற்பட்ட முதலாளித்துவ வர்க்கசிந்தனையுடன் தொடர்புடையதாகக் காணப் பட்டாலும், இது ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், அவர்களின் சமூக அரசியல் விடுதலைக்கும், ஒரு கருவியாக அமைந்தது எனலாம்.

## சிவில் சமூகமும், ஜனநாயகமும்

சிவில் சமூகமென்பது, அண்மைக் காலத்தில் நடைபெற்ற கலந்துரை யாடல்களில் ஒரு பேசுப்பொருளாக, கருப்பொருளாக அமைந்தது. ஜனநாயகம் தொடர்பான கலந்துரையாடல்களில் சிவில் சமூகம் தொடர்பான கருத்து மேலெழுந்தது சிவில் சமூகம் அரசின் நேரடியான நிர்வாகக் கட்டுப்பாட்டில் இல்லாதது. அது சுதந்திரமானது, அரசின் தலையீடின்றி மக்கள் சுதந்திரமாக ஸ்தாபனமயப்பட்டு இயங்குவதைக் குறிப்பது. மக்கள் சுயாதீனமாக இருப்பதற்கும், அவர்கள் சுதந்திரமாக ஸ்தாபனமயப்படுத்தப்பட்டு செயற்படுவதற்கும், கிடைத்த ஒரு சந்தர்ப்பமாகவே சிவில் சமூகம் அடையாளப்படுத்தப்படுகின்றது.

08

ஜனநாயகம் என்ற கருத்து உருவாக்கத்தின் வளர்ச்சியுடனேயே 19ம் நூற்றாண்டில், சிவில் சமூகம் மென்ற கருத்தும் வளர்ச்சிபெற்று, அரசின் தான் தோன்றித் தனமானதும், சமூக ஆதிக்க நடவடிக்கைகளி லிருந்தும், மக்களை காப்பாற்றும் ஒரு மாற்றுத்தத்துவமாக வெளிப்பட்டது. மன்னராட்சியின் தான் தோன்றித் தனமான ஆட்சிக்கு மாற்றீடாகவே, தாரள ஜனநாயக ஆட்சிமுறை முன்மொழியப்பட்டது என்பதை நாம் மேலே பார்த்தோம். அரசின் அதிகாரங்களை பகிர்தல், அரசின் அதிகாரங்களையும்,

அதன் கடமைகளையும் யாப்புரீதியாக வரையறுத்தல், அரசின் அதிகாரங்களை கட்டுப்படுத்தல். மக்களின் உரிமைகளை பொதுப் பிரகடத்தின் மூலம் பாதுகாத்தல், அரசின் தான்தோன்றித்தன அதிகாரங்களை மட்டுப் படுத்தல் போன்றவை தாராள ஜனநாயகத்தின் ஊடாக முன்மொழியப்பட்ட விடயங்களாகும்.

19ம் நூற்றாண்டின் சிவில் சமூகம் எனக்கருதப்பட்டது குடும்பம், சந்தை, மக்கள் அமைப்புக்கள் என்பனவற்றோடு தொடர்புடைய விடயங்களாக இருந்தன. இவைகளை அரசின் தான்தோன்றித்தனமான தலையீடு, ஆட்சியாளர்களின் அதிகாரத்திலிருந்து, பாதுகாத்தல் போன்றனவே, "சிவில்" சமூகத்தின் சுதந்திரம் எனக் கருதப்பட்டது. "சிவில் சமூகம்" தொடர்பான மிக முக்கியமான கருத்து 19ம் நூற்றாண்டிலேயே வெளிப்பட்டது. "சங்கங்க ளின் ஜனநாயகம்" அல்லது "கழகங்களின் ஜனநாயகம்" என்று வெளிப் பட்டது. அமெரிக்காவில் ஜனநாயக முறை செயற்படுத்தப்பட்ட விதம் பற்றி ஆய்வு செய்த, பிரான்சிய அரசியல் சிந்தனையாளர் அலெக்சி டி தொக்வில் என்பவரே இந்த கருத்தை வெளிப்படுத்தியவராவர். 1830களில் அவர் அமெரிக் காவில் செய்த கள ஆய்வின் முடிவாக அமெரிக்க மக்கள் தம்மை பாதிக்கும் விடயங்களை அரசாங்கம் செய்யும் வரை காத்திருக்காது, தொண்டர் அமைப்பு க்கள், சங்கங்கள் ஊடாக அவற்றை நிறை வேற்றி கொள்வது தொடர்பாக கண்டறிந்து கொண்டனர் என்று குறிப்பிட்டார்.

1840ம் ஆண்டில் "அமெரிக்க ஜனநாயகம்" என்ற தனது நூலில் அமெரிக்க மக்கள் எந்த ஒரு விடயமென்றாலும், எந்த நேரத்திலும், ஒரு நிறுவனத்தை அமைத்து அந்த தேவையை பூர்த்தி செய்து கொள்கின்றனர் என நகைச்சுவையாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த கலந்துரையாடலில் தொக் வில் சுட்டிக்காட்டிய முக்கிய அபிப்பிராயம் என்னவென்றால் அரசிலும், தனித்து சுதந்திரமாக ஒரு நிறுவனத்தை சங்கமாக அமைத்து செயல்படுவதன் ஊடாக அவர்கள் ஒரு விசேடமான ஜனநாயக முறையை நடைமுறைப்படுத்து கின்றனர். இதுதான் "சங்கங்களின் ஜனநாயகம்" அல்லது "கழக ஜனநாயகம்" என்று அடையாளப்படுத்துகின்றார்.

**09**

இந்த சங்கங்கள் அல்லது கழக ஜனநாயக கொள்கையை அடிப்படையாகக் கொண்டே 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தொக்வில் "சமூக மூலதனம்" என்ற தத்துவத்தை உருவாக்கினார். "சமூக முலதனம்" என்று சொல்லப்படுவது, மக்கள் தங்களுக்கிடையே ஒருவருக்கொருவர் ஏற்படுத்தி கொள்ளும், தொடர்பு வலைப்பின்னலாகும். இந்த மக்கள் தொடர்பு

வலைப்பின்னலுக்கு உதாரணமாக மரணாதார சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பௌத்த மகளிர் சங்கம், சீட்டு சங்கம் போன்ற கிராம மட்ட அமைப்புக்களின் வலைப்பின்னலை குறிப்பிடலாம். இதன் ஊடாக மக்களி டையே அந்நியோன்ய தொடர்பு, நம்பிக்கை, ஒருவருக்கொருவர் உதவுதல், ஆபத்தில் உதவுதல் போன்ற பலன்கள் மக்களுக்கு கிட்டுகின்றது. தனித் தனியாக இல்லாமல் பொது நோக்கிற்காக, கூட்டாக செயல்படுவதை மக்கள் கற்றுக் கொள்கின்றனர். இவ்விதம் கிராமிய மட்டத்தில் இயங்கும் சங்கங்கள், கழகங்கள் மக்களை ஜனநாயத்திற்கு பயிற்றுவிக்கும். இந்த செயற்பாட்டை ஒரு கல்வி நிறுவனத்தின் செயற்பாட்டுடன் ஒப்பிடலாம்.

சிவில் சமூகத்திற்கு அரசியல் கடமை இருக்கின்றதா? சிவில் சமூக அமைப்புக்கள் அரசியல் செய்ய வேண்டுமா? போன்ற வாதபிரதி வாதங்கள் கடந்த காலங்களில் இலங்கையில் சிவில் சமூகங்கள் தொடர்பாக எழுந்தது. சிவில் சமூகத்தின் அரசியல் வேலைகள் தொடர்பான, தாக்கங்கள் 1980களில் மேலேழும்பியதும். அதற்கு பின்னணியாக அமைந்தது. ஆசிய ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க கிழக்கு ஐரோப்பிய கம்யுனிஸ்ட் நாடுகளில் அரசுகளுக்கெதிராக, வளர்ச்சியடைந்த எதிர்ப்பு அரசியலாகும். அந்த அரசுகளுக்கு எதிரான ஒரு மாற்று அரசியல் நிழ்ச்சி நிரல் உருவா கியது. இந்த மாற்று அரசியல் எதிர்ப்பியக்கங்கள் அரசியல் கட்சியி லிருந்து உருவாகவில்லை. மாறாக தொண்டர் அமைப்புக்கள், தொழிற் சங்கங்கள், கலைஞர்களின் அமைப்புக்கள், புத்திஜீவிகளின் அமைப்புக்கள் ஊடாகவே இதற்கான தலைமைத்துவம் கொடுக்கப்பட்டது.

இவ்விதம் சர்வதிகார ஏதேச்சதிகார ஆட்சிமுறைக்குட்பட்ட நாடுகளில், அரசியல் கட்சிகளும், அரசியல் நடவடிக்கைகளும் தடைசெய்யப்பட்டிருந்தன. அந்நாடுகளில் அரசும், அரசாங்கமும், ஒன்றாகவே இருந்தது. சுதந்திரமான மக்கள் அமைப்புகளுக்கு இடமிருக்கவில்லை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால் சிவில் சமூகம் அரசினால் கபளீகரம் செய்யப்பட்டது. அதே நேரத்தில் இந்த ஏதேச்சதிகார ஆட்சிகளுக்கெதிராக, மக்கள் அமைப்பு களின் எதிர்ப்புக்கள் மறைமுகமாக படிப்படியாக, அமைதியாக, வெளிவரத் தொடங்கியது. பிற்காலத்தில் இவை அரசியல் சீர்திருத்தத்திற்கான, ஜனநாயக த்திற்கான பரந்துபட்ட மக்கள் இயக்கமாக மாறியது. கிழக்கைரோப்பியாவில் போலந்து, ஆசியாவில் தென்கொரியா,

பிலிபைன்ஸ், நேபாளம் பாக்கிஸ்தான் மற்றும் தாய்லாந்து, லத்தின் அமெரிக்காவில் சிலி, பிரேசில் மற்றும் ஆஜண்டீனா, ஆபிரிக்காவில் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் இவ்விதம் சிவில் அமைப்புக்கள் அரசியலில் இறங்கி அரசியல் மாற்றத்திற்காக உயர்துடிப்பாக செயற்பட்டமைக்கு உதாரணங்களாகும்.

சர்வாதிகார ஆட்சிமுறை இல்லாத நாடுகளில் சிவில்சமூக அமைப்புக்கள் தேவையா?, ஜனநாயக முறை காணப்படும், நாடுகளில் சிவில் சமூக அமைப்புகளுக்கு அரசியல் கடமை காணப்படுகின்றதா? இலங்கையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட வாதவிவாதங்களில் மேற்படி, சிவில் சமூகம் தொடர்பான இந்த பிரச்சினை மேலெழும்பியது. ஜனநாயகம் என்ற பக்கத்தில் பார்க்கும் போது இதற்கு நாம் அளிக்கும் பதில் "ஆம்" என்பதாகும். அரசாங்க நடவடிக்கைகளுக்கும், அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளுக்கும் அதன் நிகழ்ச்சி நிரலுக்கும், தனித்தனி நபர்களாக தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. அமைப்பு ரீதியாக செயற்படக்கூடிய மக்களுக்கு மாத்திரமே அதில் தாக்கத்தை ஏற்படுத்த முடியும் இது ஆம்" என்று கூறிய பதிலுக்கு முதலாவது அர்த்தமாகும். அதில் முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாவது பதிலும் உள்ளது. அரசாங்கத்தின் சமூக ஆதிக்க நடவடிக்கையின் போக்கை கட்டுப்படுத்துவதற்கும், தடுப்பதற்கும், சமூகம் கொண்டுள்ள வளர்ச்சி அடிப்படையிலும், ஒப்பீட்டு அடிப்படையிலுமான அமைப்பு சிவில் சமூகம் என்பதாகும். "ஜனநாயகம்" என்பது நிரந்தரமாக புதுபிக்கப்பட வேண்டியதும், புத்தாக்கத்திற்கு உட்படவேண்டியதுமாகும் ஜனநாயகத்திற்கு வரையறையை ஏற்படுத்துவது, ஆட்சியில் இருக்கின்ற அரசியல் கட்சிகளினதும், அரசியல் பிரமுகர்களினதும் சாதாரண போக்காகும். ஜனநாயகத்தை பாதுகாப்பது மாத்திரமின்றி அதனை நவீனப்படுத்துவதும், மக்கள் விழிப்போடும், ஸதாபனமயப்பட்டு உயிர்துடிப்பாக இருந்தால் மாத்திரமே சாத்தியமாகும். சிவில் சமூகத்தால் ஜனநாயத்தின் ஆரோக்கியமான இருப்பிற்கும் அது நவீனமயமாக்கப்படுவதற்கும் சிவில் சமூகம் உயிர்துடிப்பானதாக இருக்க வேண்டும் என்பது அடிப்படையான நிபந்தனையாகும்

அரசாங்கத்தின் ஜனநாயக நடவடிக்கைகளை உயிர்த்துடிப்போடு கொண்டு செல்வதற்கும், மேற்பார்வை செய்வதற்கும், அர்ப்பணிப்போடு செயற்படும் சிவில் சமூகம் ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டாதா? தாராளமாக ஈடுபட முடியும். விசேடமாக சுதந்திரமான அமைப்புக்களாகவும், நிதியை மையமாக கொண்டும் கட்டியெழுப்பப்பட்டுள்ள

இவ்வமைப்புகளுக்குள் ஜனநாயக நடைமுறை அநேகமாக தடைப்பப டுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. சில சிவில் அமைப புக்கள் அரசாங்கத்தோடு, நெருங்கிய தொடர்பை கொண்டு செயல்பட்டு ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு துணைப்போகின்றன. சிவில் அமைப்புக்கள் அவ்விதமான சந்தர்ப்பத்திற்கு முகம் கொடுப்பது, அது வெகுஜன தொடர்புகளற்று ஒரு சில பிரமுகர்களின் கட்டுப்பாட்டுக்குள் சிறைப்படுத்தப்படுவதனாலேயாகும்.

11

இவற்றோடு, வலது சாரி ஜனநாயக விரோத சிந்தனைகள், அமைப்புக்கள் மற்றும் சக்திகள் சிவில் சமூத்திலிருந்து வெளிப்படுகின்றன, சிவில் சமூகத்தின் சக்திமயப்பட்ட இருப்பினால் மாத்திரமே, வலதுசாரி சிவில் அமைப்புக்களின் சக்தியையும், தாக்கத்தையும் இல்லாதொழிக்க முடியும்.

சிவில் சமூகத்திற்கும் கட்சிகளுக்குமிடையில் என்ன வகையான தொடர்பு இருக்க முடியும்? இதுவும் கடந்த காலத்தில் அரசியல் விவாத ங்களில் எழுப்பப்பட்ட ஒரு பிரச்சினையாகும். மக்கள் விடுதலை முன்னணி போன்ற அரசியல் கட்சி முன்வைத்தது என்னவென்றால் சிவில் சமூக அமைப்புக்கள் அரசாங்கத்துடனும், கட்சிகளுடனும் இரட்டை முறையில் செயல்பட வேண்டுமென்ற அடிப்படையிலாகும். இந்த கருத்தின் அடிப்படையில் இந்த சிவில் சமூக அமைப்புக்கள் அரசியலில் ஈடுபட கூடாதென்பதாகும். அரசியல் கருத்துக்களை முன்வைக்ககூடாது, அரசாங்கத்தை விமர்சிக்க கூடாது அவை கிராம அபிவிருத்தி சங்கம், சமூக அபிவிருத்தி சங்கம் போன்று அரசியலற்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்பதாகும்.

ஆனால் எமது நாட்டின் சமூக பொருளாதார வரலாற்றை நோக்கும் போது காலனித்துவ காலத்திலிருந்து சிவில் சமூக அமைப்புக்கள் அரசிய லிலே ஈடுபடும் ஒரு சம்பிரதாயம் இருந்துவந்துள்ளது. அது இலங்கையில் ஜனநாயகத்திற்கான போராட்டங்களில் மாத்திரமன்றி, தேசிய வாத போராட்ட ங்களிலும் ஒன்றுபட்டு, செயல்படும் ஒரு சம்பிரதாயம் காணப்பட்டது. சர்வசன வாக்குரிமைக்காக போராடிய தொழிற்சங்கங்கள், பெண்கள் அமைப்புக்கள், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான அமைப்புக்கள் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் போது உருவாகிய "காலனித்துவ ஆட்சியின் கீழான செயற் பாடுடைய சிவில் சமூக அமைப்புக்களாக செயல்பட்டன. அநகாரிக தர்மபால அவர்களின் தலைமையில் செயல்பட்ட பௌத்த புனர்ஜீவன இயக்கம்

ஒரு சிவில் சமூக அரசியல் இயக்கமாகும். இருபதாம் நூற்றாண்டின் முற் பகுதியில் உருவான மது ஒழிப்பு இயக்கம் அவ்வாறானதொரு இயக்கமாகும். அண்மைக்காலங்களில் உருவாகி செயற்பட்டுக்கொண்டிருக்கும் மனித உரிமை அமைப்புகள், சிவில் சமூகத்தின் ஊடாக உருவாகி அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப, செயல்படும் நிறுவனங்களாகும். ஊடக சுதந்திரத்திற் கான அமைப்புகளும் அவவாறானவையாகும். ஆனால் இவ்வமைப்புக்கள் கட்சி அரசியலில் ஈடுபடும் அமைப்புகள் என்ற அர்த்தத்தில் அல்ல. அது தேர்தல்களின் பங்குபற்றுவதற்காகவோ, அல்லது அரசாங்க அரசியல் பதவிகளில் போட்டியிடும் நோக்கத்திலான அர்த்தத்தில் அல்லாமல் அரசியலி லிருந்து ஒதுங்கி செயற்படும் வித்தியாசமான அரசியலாகும். அரச கொள்கை களில் தாக்கத்தை ஏற்படுத்துவது, அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பாற்பட்ட வகையில் தாக்கத்தை ஏற்படுத்துவது மக்கள் அபிப்பிராயத்தை உருவாக்குவதில் தாக்கத்தை ஏற்படுத்துவது அது மட்டு மின்றி, சமூகத்தில் அரசியல் தன்மையை மாற்றுவதற்கும் முயற்சிப்பது போன்ற நடவடிக்கைகளை குறிப்பிடலாம்.

## 12

கட்சி அரசியலும், சிவில் சமூக அரசியலும் ஒன்றுக்கொன்று பகை முரண்பாடு உடையனவா? அல்லது நட்புறவு உடையனவா? ஜனநாயகத்தின் நோக்கில் இவையிரண்டும் போட்டியிடும் தன்மையுடையனவாகத் தோன்றலாம். ஆனால் அது பகை முரண்பாட்டு தன்மை கொண்டதாக அமையவேண்டிய தேவை கிடையாது. சிவில் சமூக அமைப்புகளும், கட்சிகளும், சிற்சில சந்தர்ப்பங்களில் பகிரங்கப்படுத்தாத அந்நியோன்னிய கூட்டமைப்பாக செயற்பட்டு பலனை பெற்றுக் கொள்கின்றார்கள். விசேடமான சீர்திருத்த அரசுகளோடும், எதேச்சதிகார அரசுகளுக்கு எதிராக ஜனநாயகத்திற்காக போராடும் எதிர் கட்சிகளோடும், சிவில் சமூக அமைப்புகளோடும் ஏற்படுத்திக்கொள்ளும் கூட்டணி மிக பிரயோசமான ஒன்றாகும்.

1980ம் ஆண்டு முற்பகுதி தொடக்கம் 1990ம் ஆண்டு நடுப்பகுதிவரை இலங்கையில் ஓர் எதேச்சதிகார அதிகார ஆட்சி காணப்பட்ட போது எதிர்க்கட்சி மிகப் பலவீனமாக இருந்தது, அப்போது ஜனநாயக போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றது சிவில் சமூக அமைப்புகள் என்பதை நாம் மனதில் இருத்திக்கொள்ள முடியும். 1992-1993ல் பொதுஜன முன்னணி தோன்றியது இவ்வாறானதொரு பின்புலத்திலாகும். பொதுஜன முன்னணி உருவாக்கத் திற்கான பின்னணியும்,அது கடைப்பிடித்த சீர்திருத்த வாத நிகழ்ச்சி நிரலும் சிவில் சமூக அரசியலின் பிரவேசத்தின் ஊடாக பெறப்பட்டவையாகும்.

## பெரும்பான்மை தீர்மானம் எப்போதும் ஜனநாயகமானதா?

ஜனநாயகத்தோடு, பெரும்பான்மை ஆட்சியை ஒன்றாக தொடர்பு படுத்தி, சமசமமாக கருத்து தெரிவிப்பது பொதுவாக, நாம் விடும் தவறாகும். ஜனநாயகம் என்பது மக்களால் ஆளப்படும் ஆட்சி முறை என்ற அர்த்தத்தில் எடுப்போமேயானால் அதன் அர்ததம் முழு மக்களையும் குறிப்பதாகவன்றி, மக்களின் ஒரு பகுதியினரை குறிப்பதாக அமையமாட்டாது. வேறு வார்ததை களில் கூறுவதானால் தீர்மானம் எடுக்கும் உரிமை சமமாக எல்லோருக்கும் உரித்தானது என்பதாகும். பெரும்பான்மை தீர்மானம் என்பது வெறுமனே ஒரு தொழினுட்ப ரீதியான கணிப்பீட்டு முறையாகும். ஒரு விடயம் தொடர்பாகக் கருத்து முரண்பாடு ஏற்படும் போது கருத்தொற்றுமையைக் கொண்டு வருதல் வேண்டிய தேவை எழும். அப்போது கலந்துரையாடல், திருத்தம், முடிவுக்கு கொண்டுவருதல் போன்ற ஏனைய நடைமுறைகள் மூலமாக பயன் கிடைக்காத விடத்து பெரும்பான்மை தீர்மானத்தை நடைமுறைப்படுத்தவேண்டி ஏற்படும்.

பெரும்பான்மையினரின் விருப்பத்திற்கு தடையை ஏற்படுத்தி, அதற்கு மாறாக சிறுபான்மையினரின் விருப்பத்திற்கு இடமளிப்பதை விட, பெருபான்மையினரின் விருப்பத்தை நிறைவேற்றுவது, சிறந்த ஜனநாயக நடைமுறை என்பது உண்மையாகும். இருந்தாலும் அவ்விதமான நடை முறையினால், சிறுபான்மையினர் பலகீனப்படுவார்களேயானால்,

13

அவர்களால் இறுதி தீர்மானத்தில் தாக்கத்தை ஏற்படுத்த முடியாது போனால், அவ்விதமான பெரும்பான்மை தீர்மானம் ஜனநாயக ரீதியாக அமையாது.

## ஜனநாயகத்தின் இருப்பிற்கு சுதந்திர சந்தை பொருளாதாரம் அவசியமானதா?

இது ஒரேடியாக பதில் கூற முடியாத பிரச்சினையாகும். ஒருவகையில் சுதந்திர கொடுக்கல் வாங்கல்கள் மூலம் உற்பத்தி பொருட்கள் விநியோகிக்கப்படுவது ஜனநாயகத்திற்கு நன்மைதரும் விடயமாகும். தனி மனித விருப்பு வெறுப்புக்களில் தங்கியிருப்பது போல ஜனநாயக சுதந்திர சந்தை முறையும், நுகர்வோரின் விருப்பு வெறுப்புகளில் தங்கியுள்ளது. ஜனநாயகத்தில் வாக்காளர் எப்படி இறமையுள்ளவராக இருக்கின்றனரோ,

அதே போல, சுதந்திர சந்தையிலே நுகர்வோர் இறைமையுள்ளவராக இருக்கின்றனர். சந்தையின் ஊடாக பொருளாதாரம் மத்தியத்துவப் படும்போது சந்தர்ப்பம், தகவல் வளங்கள் போன்றன சிவில் சமூகத்திற்கு கூடுதலாக கிடைக்கின்றது.

மறுபுறத்தில் சுதந்திர சந்தைபொருளாதாரத்தில் உற்பத்தி பெருக்கமும், வீழ்ச்சியும் ஏற்படுகின்றது. அதனால் மக்களுக்கு கடுமையான பொருளாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி நேரிடுகின்றது. உழைப்பாளர்கள் தேவையின் அடிப்படையில் உற்பத்தி செய்யப்படும் இன்னுமொரு பண்டப் பொருளாகத்தான் (உற்பத்தி பொருளாக) கணிக்கப்படுகின்றார்கள். சுதந்திர சந்தை பொருளாதாரத்தோடு, ஜனநாயகத்தையும், பங்குதாரராக்க வேண்டுமென்றால் சுதந்திர சந்தை பொருளாதாரத்தில் தீவிரமாக தலையிட்டு அதனை பரிசிலனைக்குட்படுத்த வேண்டும். அல்லது வழிநடத்தப்பட வேண்டும். அவ்விதம் தலையீடுவது, சுதந்திர சந்தை இயந்திரத்தை இலகுவாக மாற்றத்திற்குட்படுத்தி அதன் பிரதிபலன்களை மீண்டும் மீள் விநியோகம் செய்வதற்கும் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்குமாகும்.

ஜனநாயகத்திற்கும், சுதந்திர சந்தைக்கும் இடையிலான தொடர்பு பல அர்த்தங்களை கொடுப்பதாகும். மத்தியத்துவப்படுத்தப்பட்ட ஆட்சி முறையோடு கூடிய, பொருளாதாரத்தில் பெருந்தொகையான ஆளும் பிரிவினர் உருவாகுவதோடு, அதனாலேயே அரசியல் அனுகூலங்களை அனுபவிக்கும் ஒரு பாரிய இடைவெளி ஏற்படுகின்றது. அது ஜனநாயகத்திற்கு உகந்ததாக அமையாது. கட்சி அரசியலின் கீழ் சமூகமயமாக்கல் உரிமையோடு கூடிய, முயற்சியாளர்களை கொண்ட, பன்முகப்படுத்தப்பட்ட, பொருளாதாரம் வெற்றி பெறுமா இல்லையா என்பதற்கு தீர்வு காணப்படவில்லை. எவ்வாறாயினும் பன்முகப்படுத்தப்பட்ட அமைப்பை கொண்ட சமதர்ம பொருளாதார முறையும், சமூக ஜனநாயக பொருளாதார முறையும், தறபோதுள்ள ஏகபோக முதலாளித்துவ பொருளாதார முறைக்கு மாற்றீடாக காணப்படுகின்றது.

14

## பிரதிநிதித்துவ முறை உண்மையான ஜனநாயகமாகுமா?

பிரான்சிய புரட்சிக்கு முன் வாழ்ந்த அரசியல் சிந்தனையாளரான ருசோ பிரதிநிதித்துவ முறை ஒரு ஜனநாயக முறையல்ல என்று கூறியுள்ளார். மேலும் பொதுமக்களுக்கு பல வருடங்களுக்கொருமுறை தேர்தல்

காலங்களில் மாத்திரமே, சுதந்திரம் கிடைப்பதாகவும், அதன் பிறகு அவர்களின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டு, அவர்கள் அடிமை நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள் என்றும், விளக்கியுள்ளார். இந்தக் கூற்றில் உண்மையும், உண்மையின்மையும் இரண்டும் அடங்கியுள்ளது. இருந்தாலும், மேலும் சிந்திக்கும் போது, அது ஒரு வரையறைக்குட்பட்ட அபிப்பிராயமாகும் என்பது புலப்படும்.

பல இலட்சக்கணக்கான மக்களை ஒரே நேரத்தில் அரசியற் செயற்பாட்டில் பங்குபற்றச் செய்வது சிரமமான விடயம் என்று விசேடமாக சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல, பிரநிதிநிதித்துவ முறை என்பது அரசாங்கத்தின் முக்கியஸ்த்தர்களை (ஜனாதிபதி அல்லது பிரதமமந்திரி) பாராளுமன்ற அல்லது யாப்புரீதியான தேர்தல் ஒன்றின் ஊடாக, தெரிவு செய்து அவர்கள் மூலம் ஆட்சியை கொண்டு நடத்துவதாகும். எப்படி யாயினும் இந்த மக்கள் ஆட்சி மக்களுக்கு பலனை பெற்றுத் தரும், நன்மை தரும் சுதந்திரமானதும், நீதியானதுமமான ஒரு ஆட்சியாக அமைய வேண்டுமானால் அரசாங்கம் வெளிப்படையானதாக இருக்க வேண்டும், பாராளுமன்றம், மக்களுக்கு பொறுப்பு சொல்வது தமது கடமையென நினைத்தால் மாத்திரமே இது சாத்தியமாகும்.

பிரதிநிதித்துவ ஆட்சி முறையின் கீழ் அரசாங்கத்தின் கொள்கை களை தீர்மானிப்பதற்கு மக்களுக்கு திறந்துவிடப்பட்டிருக்கும் ஒரே மார்க்கம் தேர்தல் மட்டுமல்ல தமது பிரதிநிதிகள் ஊடாக, பாராளுமன்றத்தில் அவர்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தலாம். பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் அரசாங்க கொள்கைக்கு ஆதராவாகவும், எதிராகவும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தலாம். இவற்றுக்கு ஆதரவாக கருத்து வெளியிடுவதற்கு சங்கங்கள், நிறுவனங்கள், கட்சிகளை அமைத்து செயல்படலாம். அரசியல் கட்சிகளில் அங்கத்தவராகலாம். தங்களுடைய பிரதிநிதிகளுக்காக பக்கச் சார்பாக செயற்படலாம். அவர்களின் கருத்துகளில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் மாற்று அபிப்பிராயங்களையும், முன்மொழிபு களையும், முன் வைக்கலாம். இவற்றிற்கு பதில் அளிக்கும் வகையில், இந்த சங்கங்கள் நிறுவனங்களுடன் மற்றும் பல்வேறுப்பட்ட மக்கள் குழுக்களின் பிரதிநிதிகளுடன் அரசாங்கம் கலந்துரையாடலாம். பத்திரிகைகள் வானொலி, தொலைக்காட்சி மூலம் மக்கள் அபிப்பிராயங்களை திரட்டலாம். ஜனநாயக ஆட்சியின் கீழ் உழைக்கும் மக்களின் கருத்துக்கள் வெளிப்படுவது மேற்கூறிய நடவடிக்கைகள் மூலமாகும்.

மக்களின் கருத்துக்களுக்கு செவிமடுக்காத அரசாங்கங்களுக்கு தேர்தல் ஊடாக அதற்குரிய பலனை அனுபவிக்க நேரிடும். ஆகவே, பிரதிநிதித்துவ ஆட்சிமுறையில் மக்கள் ஆட்சியை நடைமுறைப்படுத்துவது தேர்தல் ஊடாகவே செயற்படுகிறது. ஆட்சியில் அமர விரும்பும் கட்சியினது கொள்கையையும், அந்த கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு தனி நபர்களையும் தேர்தல் ஊடாக, தெரிந்தெடுப்பதன் ஊடாகவே இதனை நடைமுறைப்படுத்துகின்றது. அது போலவே பாராளுமன்றத்தில் மேற்சொன்ன கொள்கைகளையும், அந்த தனி நபர்களையும், மதிப்பிடுவதன் மூலமே இது சாத்தியமாகும். ஆட்சியிலிருக்கும் அரசாங்கம் என்று பாராது, அவர்களது கொள்கை நடைமுறை தொடர்பாக பல்வேறுப்பட்ட ஊடகங்களில், அலை வரிசைகளில் மக்கள் அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவதன் ஊடாக இதனை சாத்தியமாக்கலாம்.

பிரதிநித்துவ ஜனநாயக முறையின் கீழ் அரசியல் சமத்துவம் கடைப்பிடிககப்படுகின்றதா? என்ற கேள்வி இன்னும் கேட்கப்படவேண்டிய தேவையுள்ளது. காரணம் ஜனநாயகம் என்னும் போது, பொதுமக்கள் சார்பாக ஒரு சிறு குழுவினரே, அந்த பெருமான்மையினர் சார்பாக தீர்மானம் எடுக்கும் முறையாக அது உள்ளது. இது ஒரு குறைபாடு, இந்தக் குறைபாடுடைய அல்லது வரையறையைக் கொண்ட முறைமைக்குள் கூட அரசியல் சமத்துவம் பேணப்பட முடியும். அது எவ்விதமெனின் எந்த ஒரு பிரஜைக்கும், அரசியல் பதவிக்காக போட்டியிட முடியும். ஊழல் மிக்க ஆட்சிமுறையில் அவ்ஊழல் ஆட்சி முறைக்கெதிராக, பொதுமக்கள் அபிபிராயத்தை உருவாக்கி அவ்வாட்சி முறையை சரி செய்துக்கொள்ள போராடமுடியும்.

இந்தவிதமான மக்கள் போராட்டங்களுக்கான உரிமைகள் இருக்கும் பட்சத்திலேயே இது சாத்தியமாகும். அதிகமாக பிரதிநிதித்துவ ஆட்சி முறைகளில் இந்த நடைமுறைகள் திருப்திகரமான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இதற்கு முக்கிய காரணங்கள் சில உள்ளன. பணத்தையும், வளங்களையும் சில தனிநபர்களும் குழுக்களும் கையகப்படுத்தி வைத்திருக்கின்றன. காலமும், நேரமும், சமூக சந்தர்ப்பங்க ளுக்கும் சிலருக்கே ஒரு கட்டத்தில் வாய்ப்பாக இருக்கின்றன. நாட்டில் காணப்படும் மேற்படி பாகுபாடுகளை குறைப்பதற்கும், அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் தாக்கத்தை உண்டுபன்னுவதற்கும், பொருத்தமான முறையை யும், ஒழுங்கு விதிகளையும் ஏற்படுத்துவதற்கு ஏற்றவகையிலான ஒரு பொறி முறையை கண்டறிய வேண்டும்.

தாராள ஜனநாயகம் தொடர்பாக இருக்கும் விமர்சனங்கள் என்ன?

உலக வரலாற்றில் தாராள ஜனநாயகம் வெற்றிபெற்றுள்ளதாக ஒரு சில தாராள ஜனநாயக சிந்தனையாளர்கள் கடந்த காலங்களில் திடமாக நம்பினர். சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பிறகும், கிழக்கை ரோப்பிய நாடுகளின் வீழ்ச்சியின் பின்னும், தாராள ஜனநாயகத்திற்கு போட்டி யடிப்படையிலான ஒரு சிந்தனையோ, ஒரு அரசியல் சித்தாந்த.

16

உருவாக்கமோ கிடையாது என்று வாதிடுகின்றனர். 1990களில் அமெரிக்கா அரசியல் சிந்தனையாளரான பிரான்சீஸ் பிகுயாமா "வரலாற்றின் முடிவு" என்ற பிரசுரத்தில் இந்த கருத்தை ஒருவாதமாக முன்வைத்தார் ஆனால் அந்தக் கருத்து பொய்ப்பிக்கப்பட்டுள்ளது.

தாராள ஜனநாயகத்திற்கு பாரதூரமான விமர்சனங்களை முன்வைத்த மூன்று மூலங்களை இங்கு நாம் பரீசிலனை செய்வோம். அதில் முதலாவது சமதர்மம் அல்லது சமூக உடமை கண்ணோட்டத்திலான விமர்சனமாகும். இரண்டாவது சமூகவாத (Commuintarian) விமர்சன கண்ணோட்டமாகும். முன்றாவது பெண்ணியவாத கண்ணோட்டமாகும். சமூக உடமையாளர்களின் அல்லது சமதர்மவாதிகளின் விமர்சனத்தின் மூலம் தாராள ஜனநாயகம் ஒரு முதலாளிவர்க்க சிந்தனையென்றும். அது முதலாளித்துவ சமூக அமைப்பில் நிலவும் சுரண்டல், வர்க்கஅடக்கு முறை போன்றவற்றை கண்டு கொள்ளாத ஒரு தத்துவமாகும் என்றும், "சுதந்திரம்" தொடர்பான தாராள ஜனநாயகத்தின் தத்துவத்தை விசேடமாக விமர்சனத்திற்கு உட்படுத்தின. "தனிமனித சுதந்திரம்" என்ற கருத்து ஒரு மாயையானது என்று சமூக உடமையாளர்கள் கூறினர்.

விசேடமாக வர்க்க அடக்குமுறை, சமூக சமத்துவமின்மை, வறுமை, சுரண்டல் நிலவும் சமூகங்களில் "தனிமனித சுதந்திரம்" பற்றி கதைக்கக் கூடியவர்களும் அதற்கு பொருத்தமானவர்களும் சலுகை பெற்ற வர்க்க சமூகத்தினர் மாத்திரமே. சமூக உடமையாளர்கள் தனிமனித சுதந்திரத்தை விட, ஒடுக்கப்பட்ட சமூகங்களின் வர்க்க விடுதலை தொடர்பாக, அக்கறை காட்டுகின்றனர். பசியோடும், வேலைவாய்ப்பின்றியும், வறுமை நிலையில் இருப்பவர்களுக்கு, சொத்துரிமை வைத்திருக்கும் சுதந்திரத்தினாலோ, பேச்சு ரிமை சுதந்திரத்தினாலோ ஏற்படப் போகும் நன்மை என்ன என்று இகழ்ச்சியாக சமதர்மவாதிகள் வினவுகின்றனர்.

19ம் நூற்றாண்டில் கார்ல் மார்க்ஸ் தாராள ஜனநாயகம் தொடர்பாக, செய்த விமர்சனம் இந்த கலந்துரையாடலுக்கு பொருத்தமானதாகும். தாராள ஜனநாயக சிந்தனையின் அடிப்படையான, தர்க்கமாக இருந்தது தனிமனிதரிடையே பொருளாதார சமத்துவமின்மை காணப்பட்டாலும், அரசியல் சமத்துவத்திற்கு எந்தவிதமான தடையும் கிடையாது என்பதாகும். மார்க்ஸ் இந்த மிகவும், கடுமையாக விமர்சனம் செய்தார். அவர் பொருளாதார சமத்துவமின்மையே அரசியல் சமத்துவமின்மைக்கு அடிப்படையாக அமைகின்றது என்பதை சுட்டிக் காட்டினார்.

தாராள ஜனநாயகம் தொடர்பாக, சமூகவாத விமர்சகர்களின் கருத்து ஒரு வகையில், சமூக உடமையாளர்களின் விமர்சனத்தை ஒத்ததாகவே அமைந்தது. சமூக உடமையாளர்கள் போன்றே சமூகவாத.

17

விமர்சகர்களும் தாராளாவாத சிந்தனையில் தனிமனிதனை மையப்படுத்திய ஆய்வினை நிராகரித்தனர். அவர்களுடைய தர்க்கம் தனி மனிதர்களுக்கு உரித்தான கலாச்சரம், மொழி, வர்க்க அடையாளங்கள் சமூக குழுக்களிலிருந்து வேறுபடுத்த முடியாத ஒன்றாகும் என்பதாகும். தனி மனிதர்களை அவர்கள் சம்பந்தப்பட்ட சமூக குழுக்களிலிருந்து வேறுபடுத்தி கணிப்பதுதான் தாராளவாதிகளின் அடிப்படை தர்க்கமாகும். "ஒவ்வொரு தனி மனிதர்களும் சமமானவர்கள். ஒரே சமமான சுதந்திரமும், உரிமைக்கும் உரித்துடையவர்களாவர்" என்ற தாராள வாதிகளின் நிலைப்பாடு இந்த தனி மனிதனை உலகத்தில் எந்த பிரிவுடனும் இனம் காட்ட முடியாத ஒரு மானசீகமான தனிமனிதன் என்ற கோணத்தில் பார்க்கின்றது. ஆனால் சமூகவாத விமர்சர்கள் மானசீகமான எந்த பிரிவோடும், இனம் காட்ட முடியாத தனி மனிதன் கிடையாது என்றும், எந்த தனிமனிதனது சுபாவமும் ஏதோ ஒரு குழுவோடு தொடர்புடையதாக இருப்பதோடு, அக்குழுவை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாகவே தனிநபர்கள் இருப்பர் என்றும் வலியுறுத்துகின்றனர்.


ஆகவே, அந்த வகையில் குழுக்களின் உரிமைகள் என்ற அடிப்படையில் இல்லாமல் தனிமனித உரிமைகள் தொடர்பாக மாத்திரம், கதைப்பது ஒரு அர்த்தமுள்ள கருத்தாக அமைய மாட்டாது. சமூகவாத சிந்தனையாளர்களின் இந்த விமர்சனம் தாராள அரசியல் சிந்தனையில் குழுக்களின் உரிமைகளுக்கான ஒரு இடத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளது. விசேடமாக, சிறுபான்மை இன மக்களது உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக, சமூகவாத சிந்தனை சமூக குழுக்களின் உரிமைகள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தாராள ஜனநாயகம் தொடர்பாக பெண்ணியவாதிகளின் விமர்சனம், சமூக உடமையாளர்களினதும், சமூகவாத சிந்தனையாளர்களினதும் வாத விவாதங்களின் அனுசரணையை பெற்றுள்ளது. ஆண்,பெண் சமத்துவம் தொடர்பாக தாராளவாதிகள் கதைத்தாலும் கூட, அந்த சமத்துவத்தை சமூகத்தில் ஏற்படுத்துவது தொடர்பாகவோ, அதனை அரசாங்க கொள்கை களில் நடைமுறை படுத்துவதற்கோ, தாராள வாதிகள் அக்கறை கொள்ள வில்லை என பெண்ணியவாதிகள் தமது விமர்சனங்கள் மூலம் சுட்டிக் காட்டியுள்ளனர். பிற்காலங்களில் ஆண், பெண் சமத்துவத்தை ஏற்றுக் கொள்ளும் நிலை தாராளவாதிகளுக்கு ஏற்பட்டது. எனினும் தாராண்மை வாதத்தின் பெண் சமத்துவ நோக்கைச் சமூக உடமைப் பெண் ணியவாதிகள் விமர்ச்சிக்கின்றனர். சம தொழில் வாய்ப்பு, சமசம்பளம் சம உரிமை ஊடாக மாத்திரம் பெண்களின் அடக்குமுறையை இல்லாதொழிக்க முடியாது. காரணம் தந்தை வழி சமூகத்தை மையமாகக் கொண்ட பெண்கள் அடக்கு முறைக்கு காரணமாயிருக்கும், இந்த தடைகளை சமூக அமைப்பில் நிறுவனரீதியாக ஏற்படுத்தும் சீர்திருத்தங்களால் மாத்திரம் கொண்டு வரமுடியாது என்பதே அவர்கள் முனவைக்கும் விமர்சனமாகும்.

## 18

**நடைமுறை ஜனநாயகத்தில் காணக்கூடிய பிரதான அம்சங்கள் என்ன?**

நடைமுறை ஜனநாயகத்தில், நான்கு பிரதான அம்சங்கள் அடிப்படையாக அமைகின்றன. அவை சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் திறந்த பொறுப்பு சொல்லக் கூடிய அரசாங்கம், சமூக அரசியல் உரிமைகள், ஜனநாயகம் அல்லது சிவில் சமூகம் போன்றவைகளாகும். அவற்றை ஜனநாயக முக்கோண அமைப்பின் அடிப்படையிலான வரைபு மூலம் விளக்கலாம்.



ஒருவகையில் போட்டிமிக்க தேர்தல் என்பது நாம் எந்தளவு பொறுப்புள்ளவர்கள், பொது மக்களின் ஆட்சி அதிகாரத்திற்கு கட்டுப்பட்டவர்கள் போன்ற காரணங்களை, நாட்டின் ஆளணியில் மக்களுக்கு நிருபித்துக்காட்டும் ஒரு சந்தர்ப்பமாக, ஒரு யுத்தியாக இதனை சுட்டிக்காட்ட முடியும். ஏன் என்றால் குடி மக்களுக்கிடையில், அரசியல் சமத்துவம் தொடர்பான உணர்வு, மக்கள் கொண்டிருக்கும் வாக்குப்பலத்தின் பெறுமதி தொடர்பான உணர்வு விருத்தியடைகின்றமை இந்த தேர்தலகள் ஊடாகவே, வளர்ச்சி பெறுகின்றது. உறுப்பினர்களை தெரிவு செய்யும் இந்த நிறுவனங்களை நிருவகிக்கின்ற சட்டத்திட்டங்கள் என்ன? அவை தொடர்பாக முன் நிற்கும் நபர்கள் யாவர்? தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்படுவது எந்த அடிப்படையில்? போன்ற காரணிகளால் நிர்ணயிக்கப்படும் தேர்தல் முறை சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை நிர்ணயிக்கும் பிரதான அளவு கோல்களாகும். இதனை தீர்மானிக்கும் இரண்டாவது காரணி தேர்தல் நடவடிக்கையாகும். தேர்தல்கள் எவ்விதம் நடத்தப்படகின்றது? வாக்காளர்களை பதிவு செய்வதிலிருந்து வாக்குகள் எண்ணப்படும்வரை, தேர்தல் சட்டங்கள் தொடர்பாக நடுநிலையான செயற்பாடு உள்ளதா? எவ்விதம் தேர்தல் முடிவுகள் வெளியிடப்படுகின்றன? போன்ற நடவடிக்கைகள் இதனோடு தொடர்புடையனவாகும். அடிக்கடி நடைபெறும் தேர்தல்கள், அவற்றோடு இணைந்த ஊழல்கள், வன்முறைகள் என்பன மக்கள் மத்தியில் விரக்தி உணர்வைத் தோற்றுவித்துள்ளது. ஆயினும் ஜனநாயக ரீதியாக தேர்தல் நடத்தப்படுவதன் ஊடாக, குடி மக்களின் அரசியல் தரம் விருத்தியடைந் திருப்பதும், அரசியலறிவு விரிவடைந்து காணப்படுவதும் குறிப்பிட்டுக் கூறக் கூடிய விடயங்களாகும். அது தேர்தல் ஊடாக கிடைத்துள்ள அரசியல் முக்கியத்துவமாகும்.

**19**

ஜனநாயக அரசாங்கத்தின் பொறுப்புகூறுதல் சட்டரீதியாக இரு வகைகளில் செயற்படுகின்றது. அரசாங்க உத்தியோகத்தர்கள் சட்டங்களை பாதுகாக்கின்றனரா? அதாவது சட்ட ஆட்சியை நடத்துகின்றனரா என்று ஆராய்ந்து பார்ப்பது நீதித்துறையாகும். அது போலே தமது கொள்கைகளின் பிரதி பலன்கள், நடவடிக்கைகளில், நீதி நியாயத் தன்மை தொடர்பாக, அரசாங்கம் மக்களுக்கும், பாராளுமன்றத்திற்கும் பொறுப்பு சொல்கின்றதா? என்பது தொடர்பாக பரிசீலித்து பார்ப்பதாகும். அது என்னவென்றால் அரசியல் தொடர்பாக பொறுப்பு சொல்லும் தன்மையாகும். இங்கு அரசியல் யாப்பை பாதுகாப்பது தொடர்பாகவும், நீதியான தீர்ப்பை வழங்குவது தொடர்பாகவும்,

நீதித்துறை அரசாங்கத்திலிருந்து சுயாதீனமாக செயல்பட வேண்டும். நிருவாககத்துறையிலும், சட்டத்துறையிலும் நிறுவனரீதியாக வேறுப்படுத்தப் பட்ட, சுயாதினமான அல்லது சுதந்திரமான நீதித்துறை ஒரு நடைமுறை ஜனநாயக அரசியல் முறைக்கு அத்தியாவசியமாகும்.

## ஜனநாயக முறைக்குள் ஆட்சியாளர்களுக்கும், சமூகத்திற்கும் இடையில்லான தொடர்பு எத்தகையது.?

சரியான, முழுமையான ஒரு ஜனநாயக ஆட்சி முறையில், அரசிற்கோ. அல்லது ஆட்சியாளர்களுக்கோ தன்னிச்சையாக செயல்பட இடம் கிடையாது. ஜனநாயக அரசியல் முறை என்ற அடிப்படையில், உண்மையில் அதன் அரசுயந்திரம் ஆட்சியாளர்கள் தன்னிச்சையாக செயல்பட இடமளிப்பதில்லை. ஒரு தனிநபரை மையமாகக் கொண்ட அரசு அதிகாரத்திற்கெதிரான ஒரு மாற்று அரசியலாகவே, நவீன ஜனநாயகம் வரலாற்று நடைமுறைகள் ஊடாக, ஒரு நிறுவன ரீதியான அதன் தன்மை களை பெற்று வளர்ச்சியடைந்தது. அதனால்தான் அரச சட்டவாக்கத்துறையும், நிருவாகத்துறையும், நீதித்துறை அதிகாரங்களும் அதன் நடவடிக்கைகளும், ஜனநாயக ஆட்சி முறையில் ஒரு தனி நபரிடமோ அல்லது நிறுவனத்திடமோ மையப்படுத்தாமல் தனித்தனியான அம்சங்களாக காணப் படுகின்றன. இதன் மூலம் இந்த நிறுவனங்களுக்கிடையில் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்நிறுவனங்களுக்கிடையில் தெளிவாக அதிகாரப்பகீர்வினை உறுதிப்படுத்த முடிகின்றது. தெளிவான அதிகார பகிர்வு அல்லது வலுவேறாக்கம் இல்லாத நிலையில் நிருவாகத்துறை, சட்டத்துறையையும் நீதித்துறையையும் கட்டுப்படுத்துவதும் ஜனநாயக அமைப்பில் தவிர்க்க முடியாத நடைமுறையாகின்றது. அரசின் "இந்த மூன்றுத்துறைகளும் ஒரு தனி நபரிடமோ அல்லது நிறுவனத்திடமோ குவிக்கப்பட்டிருந்தால் அல்லது மையப்படுத்தப்பட்டிருந்தால் அது தனிநபர் சுதந்திரத்திற்கு முடிவு கட்டுவதாக அமைந்துவிடுமென பிரான்சிய அரசியல் சிந்தனையாளராக மொன்டஸ்கியு குறிப்பிட்டிருந்தார்.அவ்விதம் நடைபெறு மானால் அது ஜனநாயக ஆட்சியாகவன்றி சமூக ஆதிக்க ஆட்சி முறை யாகவே இருக்கும்.

ஒரு ஜனநாயக முறையில், மக்களின் சுதந்திரமும், சமூக சுயாட்சி உரிமையும், எதிர்பார்ப்பாகவும், அதன் பெறுபேறுகளாகவும் அமையும். ஜனநாயக அரசியல் யாப்பில் அடிப்படை உரிமை தொடர்பான பந்திகளில் கூறப்படுவது இது தொடர்பாகவேயாகும். அந்த அடிப்படை உரிமைகளில் சர்வதேச ரீதியில் ஏற்கொள்ளப்பட்டிருக்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் அடங்கியுள்ளன. பேச்சு மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம், மனசாட்சி தொடர்பான சுதந்திரம், அமைப்புக்களை நடாத்துவதற்கான சுதந்திரம், கடுமையான சித்திரவதைகளுட்குட்படாத சுதந்திரம், கண்டப்படி கைது செய்யப்படாமல் இருப்பதற்கான சுதந்திரம், பாகுபாட்டிக்கு உட்படுத்தப் படாமல் இருப்பதற்கான சுதந்திரம் தன்னிச்சையான வழக்குகளுக்கு விசாரனைகளுக்கு உட்படுத்தப்படாதிருப்பதற்கான சுதந்திரம் போன்ற பல்வேறு விதமான சுதந்திரங்களை ஒரு ஜனநாயக அரசு, அரசியல் யாப்பின் ஊடாக வழங்குவதற்கு முன்வருகின்றது.

தனிநபர் என்பவர் சுயாதீனமான அதிகாரங்களைக் கொண்ட, சமூக த்தின் அடிப்படை அலகு என்பது, தாராள ஜனநாயக கண்ணோட்டத்திற்கு அடிப்படையாக அமைகின்றது. தனிமனிதர் சுயாதீகமாக இயங்குவதற்கு அரசாங்கம் வரையறுக்கப்பட்டதாக இருக்கவேண்டும். 'வரையறுக்கப்பட்ட அரசாங்கம் என்பது தாராள ஜனநாயக்க கோட்பாட்டின் அடைப்படைச் கருத்தாகும். ஜனநாயகத்திற்கு முன்னைய ஆட்சி முறைகளில் அரசிற்கும், ஆட்சியாளர்களுக்கும் வரையறுக்கப்படாத அதிகாரங்கள் காணப் பட்டன. நாட்டு மக்களின் வாழ்வையும், சாவையும் தீர்மானிக்கும் எதேச்சதிகார அதிகாரங்கள் ஆட்சியாளர்களிடம் இருந்ததோடு அவர்களது அதிகாரங்களும் ஒரு குறுகிய வட்டத்தில் மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஜனநாயக ஆட்சிமுறையானது இந்த எதேச்சதிகார சமூக ஆதிக்க சத்திகளின் அதிகாரம் மிகவும் கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டதனாலேயே வளர்ச்சிப்பெற்றது. "வரையறுக்கப்பட்ட அரசாங்கம்" என்பது தாராள ஜனநாயக அரசியலை பாதுகாக்கும் அடிப்படையான தத்துவமாகும்.

ஒரு ஜனநாயக ஆட்சி முறையில், அரசாங்கம் எப்படி ஒரு வரைய றைக்குட்படுத்தப்படுகின்றது? அது மூன்று அர்த்தங்களின் அடிப்படையில் நடைமுறைப்படுத்துப்படுகின்றது. அதில் முதலாவது அரசாங்கத்தின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டது என்பதாகும். ஜனநாயக ஆட்சிமுறையில் சட்டவாக்கத்துறைக்கு அல்லது பாராளுமன்றத்திற்கு சட்டங்களை இயற்றும் அதிகாரங்கள் இருந்தாலும் குடிமக்களின் சுதந்திரத்தை பாதிக்கும் வகையில்

சட்டம் இயற்ற முடியாது. அது போலவே கடந்த காலம் அல்லது முடிந்த காலம் தொடர்பாக சட்டம் இயற்ற முடியாது. அரசியல் யாப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுக்கோல்களுக்கும் அதன் கட்டுப்பாடுகளுக்கும், உட்பட்ட வகையிலேயே சட்டம் இயற்ற முடியும். இரண்டாவது வரையரை யானது அரசாங்கங்கள் ஆட்சியில் இருப்பது வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மாத்திரமே என்பதாகும்.

21

ஜனநாயக ரீதியற்ற ஒரு அரசாங்கம் அநேகமாக நீண்ட காலம் ஆட்சியிலிருக்கும். அவற்றின் ஆட்சிக்காலம் சில நேரங்களில் முடிவடைவது அவ்வாட்சியாளரின் இறப்பின் போதாகலாம். அல்லது அவர்கள் ஆட்சியதி காரத்திலிருந்து அகற்றப்பட்டால் மாத்திரமே ஆட்சி முடிவடையும். இருந்தும், ஒரு ஜனநாயக அரசாங்கத்தின் ஆயுட் காலம்' வரையறுக்கப் பட்டதாகும். அது நான்கு அல்லது ஐந்து வருடங்களை தாண்டி செல்லாது. மூன்றாவது அர்த்தத்தில் அரசாங்கமானது சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் தலையீடு செய்வது, ஒரு வரையறுக்கப்பட்ட சட்ட வரம்பிற்குள்ளாகும்.

அரசாங்கத்திற்கும், சந்தை மற்றும் சிவில் சமூகங்களுக்கிடையிலான தொடர்பு இருக்க வேண்டியது ஒப்பீட்டு அடிப்படையிலானதாகும் என்பதே இதன் மூலம் கருதப்படுகின்றது. நடைமுறை தாராள ஜனநாயக கோட்பாட்டில் வரும் தனிமனித சொத்தில், தனிமனித வாழ்க்கையில் அரசாங்க தலையீடு இல்லாது சுதந்திரமாக இருக்க வேண்டும் என்ற கருத்து, இந்த "வரையறுக்கப்பட்ட அரசாங்கம்" என்ற கருத்தின் அடிப்படையிலாகும். "வரையறுக்கப்பட்ட அரசாங்கம்" என்ற இந்த கருத்து சமகாலத்தில் பாராட்டு தலுக்கும், விமர்சனத்திற்கும் உட்பட்ட கருத்தாகும். தனிமனிதனும் சமூகமும் அரசாங்கத்தின் தன்னிச்சையான தலையீட்டிலும் அதன் அதிகாரத்திலும் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்து பாதிக்கப் படுகின்றவர்களால் தொடர்ச்சியாக எழுப்பப்படும் வாதமாகும். இருந்தாலும், 'வரையறுக்கப்பட்ட அரசாங்கம்' என்பதை யார் சொல்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். புதிய தாராளவாதப் பொருளியலாளர்களே இந்த வாதத்தை முன்வைக் கிறார்கள். சுகாதாரம், கல்வி போன்ற சமூக நலன்புரிச் செலவுகளை அரசு குறைக்க வேண்டும். அரசு அவற்றில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு 'வரையறுக்கப்பட்ட அரசாங்கம்' என்ற கருத்தைக் கூறுகிறார்கள். இக்கருத்தை நிராகரிப்போர் இதனை நவதாராளவாத நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே உள்ளது என விமர்சிப்பர்.

## அரசாங்கம், சமூக ஒப்பந்தமும் ஜனநாயகமும்

நாம் மேலே அரசாங்கத்திற்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பை, ஜனநாயக ரீதியில் பார்க்கும் விதத்தை பார்த்தோம். அதன் அறிமுகம், பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் ஒரு வாத பிரதிவாதத்தின் அடிப்படையிலோ ஆட்சி முறை என்பது உரிமை அடிப்படையிலோ அல்லது பாரம்பரிய அடிப்படையிலோ வந்ததல்ல. அது மக்களால் வழங்கப்பட்ட பொறுப்பாண்மையை தவிர வேறு ஒன்றும் இல்லை. இந்த அபிப்பிராயம் ஒரு காலத்தில் கொழும்பு பல்கலைகழகத்தில் சட்டத்துறை பேராசிரியராக இருந்து பின் அரசியல்வாதியாக மாறிய பேராசியர் ஜி.எல்.பீரிஸ் அவர்களால் சொற்ப காலத்திற்கு முன் முன்வைக்கப்பட்டது. அதாவது ஜனநாயக ரீதியிலான அரசாங்கத்திற்கும், சமூகத்துக்கிடையிலான தொடர்பு ஒரு ஒப்பந்த அடிப்படையிலானது என்பது தாராள ஜனநாயக கோட்பாட்டின் அடிப்படை யிலான வாதம் ஆகும்.

**22**

ஜனநாயகம், சமூக ஒப்பந்தம் தொடர்பான இந்த கருத்தை வளர்தெடுத்தவர் 17ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த அரசியல் சிந்தனையாளரான ஜோன் லொக் ஆவார். அவர் அரசாங்கம் என்பது மக்களால் ஆட்சியாளர்களுக்கு ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட பொறுப்பாகும் என்று மிக அழுத்தமாக கூறினார். இந்த ஒப்பந்தத்தின் ஊடாக, நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு ஆட்சியாளர்கள் கட்டுப்பட்டுள்ளார்கள். நிபந்தனைகளை நிரைவேற்றாவிட்டால் அந்த ஒப்பந்த த்தை அகற்றி அல்லது இல்லாது செய்து ஆட்சியாளர்களை மாற்றுவதற்கான அதிகாரம் பொதுமக்களுக்கே உள்ளது.

இது ஒரு வகையிலான ஒப்பந்த அடிப்படையிலான தொடர்பாகும். இந்த விடயத்தை தெளிவுப்படுத்திக்கொள்வதற்கு ஒரு வீட்டு ஒப்பந்த காரரை உதாரணமாக கொள்வோம். நீங்கள் உங்களது வீட்டை கட்டுவதற்கு ஒரு வீட்டு ஒப்பந்த காரரிடம் ஒரு ஒப்பந்தம் செய்வதாக நாம் கருதிக் கொள்வோம். அவர் வீட்டைக்கட்டிக்கொண்டு போகும் போது சீமெந்து, மணல்,சுண்ணாம்பு போன்ற கலவைகள் சரியான தரத்தில் சேர்க்கவில்லை, தரமற்ற செங்கற்களை உபயோகிக்கின்றார்கள் என்ற தகவல் உங்களுக்குக் கிடைக்கிறது எனக் கொள்வோம். அது உண்மையானால் இந்த வீட்டு ஒப்பந்த காரர் தங்களோடு ஏற்படுத்திக்கொண்ட, ஒப்பந்தத்தை மீறியுள்ளார். ஆகவே ஒப்பந்தக்காரர்

தங்களோடு ஒத்துக்கொண்டதற்கேற்ப ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தாத படியால் அந்த ஒப்பந்தத்தை இல்லாமல் செய்வதற்குறிய உரிமை தங்களுக்கு இருக்கின்றது.

அதே நேரத்தில் வேறொரு ஒப்பந்தக் காரரிடம் ஒப்பந்தம் செய்வதற்கும் தேவை ஏற்படுகின்றது. புதிய ஒப்பந்தக்காரர் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை கடைப்பிடிக்கிறாரா அல்லது நிறைவேற்றுகிறாரா என கவனமாகவும், முன்னெச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். ஆகவே ஜனநாயகத்தின் நல்லிருப்புக்கு குடி மக்கள் விழிப்பாகவும் கவனமாகவும் இருக்க வேண்டும் என்பது ஊகிக்க கூடிய ஒன்றாகும். பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் வரும் தேர்தல்கள் என்பது ஆட்சியாளர்களோடு, பொதுமக்கள் தற்காலிகமாக ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தம் போன்றதாகும். இந்த ஒப்பந்தத்தை புதுபிப்பதும் அல்லது ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு மக்களுக்கு கிடைக்கும் ஒரு பொன்னான சந்தர்ப்பம் தேர்தல்கள் ஆகும்.

## சுதந்திர கலந்துரையாடலும், தேர்தலும் நல்ல ஜனநாயகத்திற்கு தேவைப்படுவதேன்?

கடந்த காலங்களில் இலங்கையில் சுதந்திர, நீதியான தேர்தல்கள் தொடர்பாக காத்திரமான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஊழலற்ற தேர்தலுக்காக அரசியல்வாதிகளும், பொது மக்களும் வீதியில் இறங்கி ஊர்வலம் சென்றனர். சிவில் சமூகத்தில் ஒரு சில அமைப்புக்கள் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டன. இன்னும் சிலர் தேர்தல் வன்முறைகள்,



பலாத்கார நடவடிக்கைகள் தொடர்பாக கண்காணித்தனர். ஆகவே, ஜனநாயகத்தில் சுதந்திரமானவன்முறையற்ற, ஊழலற்ற தேர்தல்கள் ஏன் தேவைப்படுகின்றன? இது பற்றி நாம் சிநதிக்க வேண்டும்.

இதற்கு பதில் பிரநிதித்துவம் தொடர்பான தத்துவத்திலும், கருத்திலுமே காணப்படுகின்றது. இதற்கான பதில் நாம் மேலே பார்த்த ஜனநாயகம் சம்பந்தப்பட்ட சமூக ஒப்பந்தத்திலும், பொறுப்பாண்மை

தொடர்பான வாத விவாதத்திலும் சம்பந்தப்பட்டுள்ளது. ஆட்சி முறை என்பது வரையறுக்கப்பட்ட காலத்திற்கு ஆட்சியாளர்களுக்கு பொதுமக்கள் வழங்கும் நிபந்தனைகளுடன் கூடிய பொறுப்பாண்மை என்ற அர்த்தத்திலும் தேர்தலோடு, சம்பந்தமுடைய மேற்சொன்ன பிரச்சினைகளுடன் நேரடியாக தொடர்புப்பட்டவையாகும். ஆட்சியாளர்களோடு, பொறுப்பாண்மை தொடர்பாக, செய்துகொள்ளப்படும் ஒப்பந்தம் இடைக்கிடை புதுபிக்கப்படுவது ஜனநாயகத்தில் மக்களுக்குள்ள உரிமையாகும். தேர்தல் என்பது ஆட்சி முறையின் பொறுப்பாண்மை ஒப்பந்தத்தை அல்லது ஆட்சியாளர்களுக்கும் ஆளப்படுபவர்களும் இடையிலான இந்த ஒப்பந்த அடிப்படையிலான தொடர்பை புதுப்பிக்கும் ஒரு சந்தர்ப்பமாகும்.

மேற்சொல்லப்பட்ட "ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும்" நடவடிக்கை ஏன் சுதந்திரமானதாகவும், ஊழலற்றதாகவும் நியாயமானதாகவும், பலாத்கார மற்றதாகவும் அமைய வேண்டும்? இதற்கான பதில் தாராள ஜனநாயக வாதக் கோட்பாட்டின் அடிப்படை எடுகோளிலேயே தங்கியுள்ளது. தேர்தலில் ஆட்சி அதிகாரத்தை கேட்டுவரும் ஆட்சியாளர்களிடையே தாம் விரும்பிய ஆட்சியாளரை சுதந்திரமாக, தமது விருப்பப்படி எந்தவிதமான வெளியழுத்தமு மின்றி தெரிவு செய்யும் உரிமை மக்களுக்கே இருக்கின்றது. இதன் அடிப்படையில் ஜனநாயக வாய்ப்பு என்பது ஒரு திறந்த வாய்பாகும். தாராள ஜனநாயக வாதிகள் அதனை திறந்த சந்தை வாய்ப்புடன் ஒப்பிடுகின்றனர். சுதந்திர அரசியல் வாய்ப்பின் ஊடாக, தமது ஆட்சியாளர் யாரா இருக்க வேண்டும் என்பதை தமது சுயவாக்குரிமையால் தீர்மானிப்பது பொதுமக்களின் மீறப்பட முடியாத உரிமையாகும். அதற்கு அரசியல் சந்தை பூரண போட்டியுள்ள சந்தையாக, ஆட்சியில் ஈடுபட சுதந்திரமாக விரும்புகின்றவர்கள், பங்குபற்றுவதற்கான சுதந்திர வாய்புள்ள ஒன்றாகவும் அமைய வேண்டும். இவ்விதமான சுதந்திரமான வாய்ப்பின் மூலம் பொது மக்கள் தமது விருப்பத்தை தெரிவிப்பதற்கான சுதந்திரமான வாய்ப்பை அளிப்பதன் மூலமே அரசாங்கம் தனது நேர்மைத்தன்மையை நிருபிக்க முடியும். இந்த ஆய்வின் படி, பலாத்காரம், ஊழல் மற்றும் மோசடிகள் மூலம் நடப்பது பொது மக்களுக்கு இருக்கின்ற சுதந்திரமான, எந்தவிதமான தடையும் இல்லாமல், அரசியல் தீர்மானம் எடுக்க இருக்கின்ற உரிமைக்கு தடை ஏற்படுத்துவதாகும். இவ்விதமான தடைகளுக்கு மத்தியில் ஊழல் மிக்க தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவுசெய்யப்படும் அரசாங்கம் சட்டரீதியான அரசாங்கமாக இருக்க மாட்டாது. அவ்விதம் ஒரு அரசாங்கம் ஆட்சி அதிகாரத்தை பெற்றால் அது எந்த வகையிலும் மக்களின் தீர்ப்பால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்க மாக கணிக்கப்பட மாட்டாது.

## ஜனநாயகத்துள் ஜனநாயகமற்ற சந்தர்ப்பங்கள் இருக்க முடியுமா?

எடுத்த எடுப்பிலேயே முரண்பட்ட வெளிப்படுத்தலாக இது இருப்பினும், ஜனநாயகம், ஜனநாயக விரோதமான முறையில் செயற்படும் சந்தர்ப்பங்கள் பல இருக்கின்றன. வெறுமனே பெரும்பான்மையினரின் விருப்பம் மாத்திரம் ஜனநாயகமாகாது என்பதை மேலே பதிவு செய்தோம். இது தொடர்பாக, தனது கவனத்தை செலுத்தியவர் ஆங்கிலேய தேசியத்தவரான ஜோன் ஸ்டுவட் மில் என்பவரும் பிரான்சிய தேசத்தவரான அலக்சி டி தொக்வில் என்ற அரசியல் சிந்தனையாளருமாவார். அவர்கள் இருவரும் **ஜனநாயகம் என்று பெரும்பான்மை ஆட்சிக்கு அர்த்தம் கொடுத்தால் அதில் பெரும்பான்மையினரின் அதிகார ஆதிக்கமே வெளிப்படும் என்று சுட்டிக்காட்டினார்.**

மில் அவர்களின் அவதானிப்பின் மூலம் பெரும்பான்மையினரின் விருப்பமும், கருத்தும் மாத்திரமே, சரியென ஏற்றுக்கொள்வோமெயானால் அதில் ஜனநாயக விரோத விளைவுகள் ஏற்படும் என்று கூறியுள்ளார். அதன் மூலம் உடன் பாடின்மைக்கும், மாற்று, ஒத்துவராத கருத்தை வெளிப்படுத்துவதற்குறிய உரிமைக்கும் இடமளிக்கப்படுவதில்லை. மாற்று கருத்தை கொண்டிருக்கும் சிறுபான்மையினர் பிழையானவர்கள் என கணித்து ஒன்றில் அவர்களை பெரும்பான்மையினரின் கருத்துக்கு பலாத்காரமாக கொண்டு வருவதற்கோ, இல்லாவிட்டால் அவர்களை ஓரங்கட்டுவதற்கோ, அல்லது அடக்குவதற்கோ பெரும்பான்மையினர் ஆயத்தமாவது சமூக ஆதிக்கத்தின் வெளிப்பாடாகும். எண்ணிக்கை ரீதியிலான பெரும்பான்மையினர் எப்போதும் சரியானவர்களாக இருப்பதில்லை. சிறுபான்மையினரின் கருத்து அந்த நேரத்தில் பிழையானது போல் தென்பட்டாலும், அந்த கருத்துக்கும் மதிப்பளிப்பது அவர்களுக்கும் இடமளிக்கும் போது, மாத்திரம் தான். பெரும்பான்மையினர் சரியானவர்களாக இருக்க முடியும்.பெரும்பான்மை மாத்திரம் ஒரு அபிப்பிராயம் தொடர்பாக கணிக்கப்படுவதற்கான அளவு கோலாக கொள்ளமுடியாது. பெரும்பான்மையினரின் சமூக ஆதிக்கத்தை தவிர்ப்பதற்கு உடன்பாடின்மை தொடர்பாக அல்லது மாற்று கருத்து தொடர்பாக, அவர்களுக்கு கருத்தை தெரிவிப்பதற்கான உரிமை ஜனநாயக ஆட்சியில் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்பதே மில்லின் கருத்தாகும்.

வெறுமனே, எண்ணிக்கை அடிப்படையிலான பெரும்பான்மையினரின் விருப்பத்தை, ஜனநாயகம் என கருத்தில் கொள்வது, இன்னொரு பக்கம் ஒரு இரத்ததிகாரத்தை பாவிப்பது, போன்ற செயலுக்கு ஒப்பாகும் என 1970களில் அரேன்ட் லிஜ்பார்ட் என்ற, அரசியல் விஞ்ஞான பேராசிரியர்

எச்சரித்துள்ளார். இது இனத்துவ பெரும்பான்மை ஜனநாயகம் தொடர்பாக பேராசிரியர் லிஜ்பார்ட் முன்வைத்த ஒரு கருத்தாகும். ஜனநாயகம்

25

தொடர்பாக சாதாரணமாக விளங்கிக்கொள்ளுதல் மற்றும் பழக்கப்பட்டு போன நடைமுறையில் காணப்பட்ட குறைபாட்டை நீக்குவதற்கு, இந்த கண்ணோட்டம் உதவியாக இருந்தது. அதில் சொல்லப்பட்ட விடயம் இதுவாகும்.

பல்வேறு விதமான இனக் குழுக்கள் வாழும் ஒரு சமூகத்தில் அல்லது பல்லின சமூகத்தில் பிரித்தானிய பாராளுமன்ற மாதிரியை அடிப்படையாக கொண்ட, ஆட்சி முறையில், பெரும்பான்மையினம் என கணிக்கப்படும் இனக்குழுவுக்கே, அரசாங்கத்தின் ஆட்சியதிகாரம் முழுமையாக கிடைக்கின்றது. அதே நேரத்தில் சிறுபான்மையாக இருக்கும் இனக்குழுக்களுக்கு சதாகாலமும் ஆட்சியதிகாரம் கிடைப்பதில்லை. அவ்விதமான ஜனநாயகம் பெரும்பான்மை ஜனநாயகம் அல்லது Majoritarian Democracy என்ற நிலையை அடைகின்றது. அநேக நாடுகளில் கிடைக்கும் அனுபவங்களில் இவ்விதமான ஜனநாயக நாடுகளில் பெரும்பான்மை இன குழுவுக்கும் சிறுபான்மை இனக் குழுவுக்குமிடையயே கட்டாயமாக மோதல்கள் இடம் பெறுவதற்கு காரணமாகின்றது.

ஜனநாயகம் இந்த எல்லைகளை தாண்டி வெற்றி பெறுவது எவ்வாறு? இன்னொரு வார்த்தையில் கூறுவதானால் ஜனநாயகத்தை ஜனநாயகமாக்குவது எவ்வாறு? பெருபான்மை ஜனநாயகத்திற்கு மாற்றாக பேராசிரியர் லிஜ்பார்ட் முன்வைத்திருப்பது மகா கூட்டனி ஜனநாயகமாகும் Consociational Democracy என்பதாகும். இதன் மூலம் முன்வைக்கப்படுவது இனக்குழுக்களாக காணப்படும் பெரும்பான்மை சிறுபான்மை இனக்குழுக்களுக்கிடையே ஏற்படும் கூட்டணி ஆட்சிமுறையாகும். இக்கூட்டணி அரசாங்கம் இன்னும் சில அடிப்படை விடயங்களை அடிப்படையாக கொண்டு, தமக்குள் ஸ்தாபனப்பட வேண்டும். கூட்டாட்சி முறையின் ஊடாக அதிகாரத்தை பகிர வேண்டும். விகிதாசார முறையின் ஊடாக பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களை தெரிவு செய்ய வேண்டும். அமைச்சர்கள் அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் இன விகிதாசார முறையில் நியமிப்பதில் இவ்வரசாங்க சார்பு அங்கத்தவர்களாக இருந்தால் கூட தாம் சார்ந்திருக்கும் இனக் குழுமத்தினருக்கு பாதகமான கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கான உரிமை மேற்படி குழுக்களுக்கு உத்தர

வாதப்படுத்தப்பட வேண்டும் போன்ற அடிப்படை இதன் அடிப்படை அம்சங்களாக இருக்க வேண்டும்.

## 26

## ஜனநாயகத்தின் இடைவெளிகளை நிரப்புவதும், அதன் குணாம்ச தன்மையை வளர்த்தெடுப்பதும்.

ஜனநாயகத்தில் நிரப்ப வேண்டிய இடைவெளிகள் பலவாகும். "ஜனநாயகத்தின் இடைவெளிகள்" என்ற இந்த பதம் கடந்த காலத்தில் பயன்பாட்டிற்கு வந்தது. ஜனநாயகம் ஒரு நடைமுறை என்ற அடிப்படையில் ஜனநாயக இடைவெளிகள் என்ற கருத்து ஜனநாய நடைமுறைகள் உள்ள குறைவுகளை வெளிப்படுத்துகிறது. குறிப்பிடுவதற்காகவாகும். தென்னாசியாவில் அரசியல் செயல்பாட்டாளர்களுடன், ஜனநாயகம் தொடர்பாக கலந்துரையாடும் அநேகமான சந்தர்ப்பங்களில் கீழ் குறிப்பிடப்படும் ஜனநாயக இடைவெளிகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டது.

- எமது நாட்டில் அரசியல் ஜனநாயகம் காணப்பட்டாலும், பொருளாதார சமூக ஜனநாயகம் கிடையாது. பொருளாதார சமத்துவமின்மை, சாதி அடக்குமுறை, வர்க்கவேறுபாடு, இனபாகுபாடுகள் மிக கடுமையாக காணப்படும் போது, ஜனநாயகத்தின் மூலம் பயன்பெறுவோர் சலுகைகள் பெற்ற சமூக பிரிவினர்கள் மாத்திரமே.
- ஜனநாயகம் என்பது வசதி படைத்த பிரமுக வர்க்கத்தினரின் கைகளுக்கு மாறிவிட்டது. தற்போது காணப்படுவது மக்கள் ஜனநாயகம் அல்ல பிரமுகர்களின் ஜனநாயகமாகும்.
- ஜனநாயக ஆட்சி முறை, ஊழல், பலாத்காரம், மோசடி போன்றவற்றின் ஆதிக்கத்திற்கு உட்பட்டுள்ளது.
- ஜனநாயகத்தின் பெறுபேறுகள் சிறுபான்மை சமூக மக்களுக்கு போதியளவில் கிடைக்கவில்லை. அதற்கு காரணம் பெறுபான்மை இனத்தவர்களின் ஆதிக்கத்திற்கு ஜனநாயகம் உட்பட்டிருப்பதுதான்.

இந்த விமர்சனம் எந்தளவு தூரம் சக்திவாய்ந்தது என்றால், ஜனநாயக வெற்றிடம் அல்லது இடைவெளிகள் எற்ற சொற்கள் கூட இதனை வெளியிடுவதற்கு பொருத்தமான வார்த்தையாக அமையாது. மேற்படி விமர்சனங்களுக்கு ஒரு அடிப்படை இருக்கின்றது. இந்த விமர்சனங்களையே ஜனநாயக தத்துவத்தின் அறிமுகம் என்ற அடிப்படையில் மீண்டும் வெளிப் படுத்துவதானால், எமது சமூகத்தில் "ஒழுங்கு விதி முறையிலான

ஜனநாயகம்" நிலை நாட்டப்பட்டிருந்தாலும், இவை இன்னும் ஒரு அர்த்தத்தில், சாரம்சத்தில் ஜனநாயகமாக மாற்றமடையவில்லை என்பதாகும்.

"ஒழுங்கு விதி முறையிலான ஜனநாயகம்" தாராள ஜனநாயகத்தில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட ஒரு ஜனநாயக முறையாகும். தனி மனித சுதந்திரம், சிவில் மற்றும் சமூக அரசியல் உரிமைகள், சுதந்திர தேர்தல், வாக்களிக்கும் உரிமை, சகல தனிமனிதர்களையும், சமமாக கணிப்பிடுவது, சட்டத்தின் ஆட்சி, போன்றவை காணப்படும் போது ஜனநாயகம் முழுமையானது என்று கருதுவது "ஒழுங்கு விதி முறையிலான ஜனநாயகத்" தன்மை என கருதப்படுகின்றது.

27

சராம்ச ரீதியிலான் ஜனநாயகத்தில் முன்வைக்கப்படுகின்ற வாதத்தின் படி இங்கு "ஒழுங்கு விதி முறையிலான ஜனநாயகம்" என்பது குறைந்த பட்ச ஜனநாயகம் என்ற கண்னோட்டத்திலாகும். இந்த அறிமுகம், சமூக பொருளாதார சமத்துவமின்மையை அகற்றுதல், பொருளாதார வளங்களை பகிர்தல், சிறுபான்மை உரிமைகள், குழுக்களின் உரிமைகள் போன்றவைகள் தொடர்பாக கதைப்பதில்லை. கதைக்கப்பட்டால் தனிமனித உரிமைகள் பாதுகாக்கப்படுமானால் ஏனைய உரிமைகளும், பாதுகாக்கப்படும் என்றே கூறுகின்றனர்.

சாரம்ச ஜனநாயக வாதிகள் கூடுதலாக கவனம் செலுத்துவது தனிமனிதர்களிடையேயான சமத்துவத்தை விட தனி நபர்களை பிரதிநிதித்து வப்படுத்தும் சமூகங்களுக்கிடையிலான சமூக சமத்துவத்தைதான் முதன்மை படுத்துகின்றனர். சமூக குழுக்களுக்கிடையிலே காணப்படும் பொருளாதார சமூக வேறுபாடுகளையும், சமத்துவமின்மையையுமே கூடுதலாக கவனத்தில் கொள்கின்றனர். இந்த வாதத்தை கவனித்துக்கொண்டிருக்கும் ஒருவருக்கு ஜனநாயக சமூகம் அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டுமானால், ஒழுங்கு விதிமுறையிலானதும், சாராம்ச ரீதியிலானதுமாக இரண்டும் ஜனநாயகத்தை சக்திமயப்படுத்துவதற்கு, தேவையானவை என்பதை புரிந்துக்கொள்வர். இது ஜனநாயக இடைவெளிகளை நிரப்புவதை விட, ஜனநாயகத்தை குணாம்ச தன்மை அடிப்படையில், வளர்த்தெடுப்பதற்கு அவசியமான காரணிகள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## ஜனநாயகமும் சமத்துவமும் தொடர்பான பிரச்சினைகள்

ஜனநாயகம் வரலாற்றுரீதியாக பெற்றுக்கொடுத்திருக்கும் வெற்றி என்னவென்றால் "சமத்துவம்" தொடர்பான அடிப்படையான அரசியல் கொள்கையாகும். (1) சகலரும் சமமானவர்கள், (2) சகல மனிதர்களுக்கும் சமத்துவமான உரிமைகள் உண்டு. (3) மனிதர்களிடையயே சமத்துவ மின்மையை சிலநேரம் நியாயப்படுத்தக்கூடியதாக இருக்கும். அது மனிதர்க ளிடையே காணப்படும் சமத்துவமின்மையை குறைப்பதற்கு, பங்களிப்பு செய்யும் வகையில், அமைந்திருந்தால் மாத்திரமே என்ற மூன்று கருத்துக்கள் உள்ளடக்கிய வகையிலேயே சமத்துவம் என்ற அடிப்படை அரசியல் கொள்கை அமைந்துள்ளது. சர்வஜன வாக்குரிமை என்பது மனிதர்களிடையே சமத்துவம் தொர்டபான தத்துவத்தை அடிப்படையாக கொண்டு ஜனநாயகத் தோடும், சமத்துவத்தோடும் நிரந்தரமாகவே பின்னிப்பிணைந்துள்ள இன்னுமொரு அடிப்படை தத்துவமாகும்.

**28**

இக்கருத்து எதனைக் குறிப்பிடுகிறது என நோக்குவோம். தேர்தலில் பங்கு கொள்ளும் ஒவ்வொரு பிரஜையும் சமத்துவமானவர் என்பதையே இது குறிக்கிறது. பிரஜைகளிடையே ஏழை, பணக்காரன், கற்றோர், கல்லாதவர்கள், ஆண், பெண் என்ற வேறுபாடுகள் உள்ளன. ஆயினும் வாக்குரிமையை இவ்வேறபாடுகளைக் கடந்து அனைவரும் சமத்துவமான முறையில் ஓர் பிறப்புரிமையாகப் பெற்றுக் கொள்வர்.இதன் அடிப்படையில் தேர்தலில் ஒரு பிரசை தெரிவு செய்யும் தெரிவு இன்னொரு பிரசை தெரிவு செய்யும் தெரிவில் எந்த விதத்திலும் கூடியதோ, அல்லது குறைந்ததோ அல்ல. ஒவ்வொரு வாக்குக்கும் ஒரே விதமான சமத்துவமான மதிப்பும் அதற்குரிய நிறையையும் கொண்டிருக்கின்றது. எமது நாடு போன்ற சமத்துவமின்மை பரவலாக காணப்படும் ஒரு சமூக சூழலிலேயே நவீன ஜனநாயக முறை வரலாற்று ரீதியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது தெரிகின்றது.

எமது சமூகத்தில் வர்க்க வேறுபாடுகள், சாதி வேறுபாடுகள், இன வேறுபாடுகள் மற்றும் ஆண் பெண் பால் வேறுபாடு காணப்படுவதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது எமது சமூகத்தில் காணப்படும் சமத்துமற்ற அரசியல் சமூக பொருளாதார காரணிகளேயாகும். இருந்தாலும், ஜனநாய கத்தின் முக்கியத்துவம் என்வென்றால் அந்த சமத்துவமின்மைக்கு எதிராக குரல் கொடுத்து அந்த சமத்துவமின்மையை குறைத்துக்கொள்வதற்கும்

சமூக அரசியல் அபிலாசைகளை ஏற்படுத்தி அதனை வளர்த்தெடுப்பதற்கும் ஜனநாயக பங்களிப்பு செய்வதாகும்.

சுதந்திரம், நீதி, நியாயம், சமத்துவம் போன்ற சமூக அபிலாசைகளுக்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதற்கு இதனை, சிறந்த உதாரணமாகவும், ஜனநாயகத்தை அடைவதற்கான அனுபவங்களாகவும் பயன்படுத்திக்கொள்ள முடியும். இதற்கு முன்பு மேற்படி, உதாரணம் தொடர்பாக சுட்டிகாட்டி இருந்தாலும், அதனை மீண்டும் ஒரு முறை இங்கு சுட்டிக்காட்டுவது சிறந்ததாகும். சர்வஜன வாக்குரிமை என்பது ஜனநாயகத்தின் அதிமுக்கியமான, அரசியல் நடைமுறையாகும் இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமை கிடைத்தது 1931ம் ஆண்டாகும். 1929ல் இலங்கை அரசியல் யாப்பு சீர்த்திருத்தம் தொடர்பான சிபார்சுகளை முன்வைப்பதற்கு டொனமூர் அணைக்குழு வந்தபோது, இலங்கைககு சர்வசன வாக்குரிமையை பெற்றுத்தருவதற்கு முன்னணியில் பல அமைப்புக்கள் தொழிற்பட்டன. தொழிற் சங்கங்கள், பெண்கள் அமைப்புக்கள் சிங்கள, தமிழ் இரண்டு சமூகங்களை சார்ந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கான அமைப்புக்கள் என்பன இவற்றுள் மிக முக்கியமான வைகளாகும்.

29

தமிழ், சிங்கள சமூகங்களில் இருந்த சலுகை பெற்ற உயர் வர்க்கத்தினர், இந்த சர்வசன வாக்குரிமைக்கு, தமது முழுமையான எதிர்ப்பபை தெரிவித்தனர். இந்த ஜனநாயக உரிமைக்காக போராடிய அடக்கியொடுக்கப்பட்ட மக்கள், இது சமூகத்தில் அதிகாரமில்லாமலிருக்கும் குடிமக்களுக்கு, அரசியல் ரீதியான அதிகாரத்தை பெற்றுக்கொடுக்கும் ஒரு மார்க்கமாக நம்பினர். ஜனநாயகத்திலிருக்கும் ஒரு கவர்ச்சிகரமான அம்சமும் அதுவாகும். ஒடுக்கப்பட்டவர்களின் ஆயுதமாகவும் சமூக விடுதலையின் ஒரு ஊடகமாகவும் ஜனநாயகம் அதனால் தான் மதிக்கப்படுகின்றது.

## ஜனநாயகம் காரணமாக சமத்துவமின்மை முடிவுக்கு வருமா?

ஜனநாயகம் காரணமாக பொருளாதாரம், சமூக, அரசியல் சமத்துவமின்மை முடிவுக்கு வருமா? இதற்கு இரண்டு பதில் அளிக்க முடியும்.முதலாவது முடியாது என்ற பதிலாகும். இரண்டாவது ஜனநாயகத்தினால் சமத்துவமின்மையை இல்லாதொழிக்க முடியும் என்ற பதிலாகும். ஜனநாயகத்தில் மக்கள் போராட்டம் தொடர்ச்சியாக ஒரு

குறிக்கோளாகவும், நிகழ்ச்சி நிரலில் ஒரு மையப்படுத்தப்பட்ட ஒரு தொனிப் பொருளாக அமையுமானால் மாத்திரமே சமத்துவமின்மையை இல்லாதொழிக்க முடியும். ஜனநாயகத்திற்குரிய ஒரு சிறப்புத்தன்மை என்ன வென்றால் அது சமூக விடுதலையை அபிலாசையை பிரசவிக்ககூடிய ஆற்றலை கொண்டுள்ள மையாகும். இருந்தாலும் அந்த அபிலாசைகள் அல்லது உணர்வுகள் முழுமை பெறாத போது, சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் பாதிக்கப்படுவது ஜனநாயகத்திலிருந்து கிடைக்கும், பொதுவான அனுபவங்களிலிருந்து பெறப்படும் ஒரு பக்கமான அனுபவமாகும்.

இரண்டாவதாக நாம் விசேடமாக பார்க்ககூடிய காரணியாக இருப்பது ஜனநாயகம் அரசியற் துறையில் பல மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைந்தாலும், சமூக தளத்தில் குறிப்பிடக்கூடிய அளவிற்கு பயன்மிக்க மாற்றங்களை காணமுடியாதுள்ளது. விசேடமாக, வர்க்க ஒடுக்குமுறை, சாதி ஒடுக்குமுறை, பெண் அடக்குமுறை, இன அடக்குமுறை போன்ற அடக்குமுறைகள் எமது சமூகத்தில் அரசியல் ஜனநாயகமாக நிலவும் அதே நேரத்தில் இந்த அடக்கு முறைகளும் தொடர்ந்தும் காணப்படுகின்றன. இதனால் தான் தெற்காசியாவிலே அரசியல் ஜனநாயகம் காணப்பட்டாலும், சமூகங்கள் இன்னும் ஜனநாயகப்படவில்லை என்று சிலர் கூறுகின்றனர்.

சமூகம் ஜனநாயகமாக இல்லாதபோது அதனால் ஏற்படும் பாதிப்பு என்னவென்றால் ஜனநாயக பெறுபேறுகளை ஒடுக்கப்பட்ட அடித்தள மக்களுக்கு, அனுபவிக்கும் சந்தர்ப்பம் கிடைக்காமல் போவதாகும். இது கூடியளவிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு குற்றச்சாட்டாகும். சகல குடிகளும் ஜனநாயக அரசியலை சரியாக அனுபவிக்க வேண்டுமானால்

30

சமூகம் ஜனநாயக பூர்வமானதாக அமைய வேண்டும் ஜனநாயகமல்லாத ஒரு சமூகத்தில் காணப்படும் அரசியல் ஜனநாயகம் இதனால்தான் "முழுமையற்ற அல்லது பூரணமற்ற" ஜனநாயகமாக கொள்ளப்படுகின்றது.

ஜனநாயகம் தொடர்பான முக்கிய பாடத்தை இதன் மூலம் ஒருவர் கற்றுக்கொள்ள முடியும். ஜனநாயகம் என்பது சமத்துவமற்ற அதிகார அமைப்புக்களை கொண்ட சமூகங்களையும் கூட, கட்டுப்படுத்தும் சக்தியை கொண்டது. இலங்கையிலும் கூட சமத்துவமற்ற அதிகார அமைப்புக்கள்

ஜனநாயகத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளமையை காணக்கூடியதாக உள்ளது. சமத்துவமின்மையால் பாதிக்கப்பட்டுள்ள சமூகங்களின் விடுதலைக்கான தொலைநோக்கானது ஜனநாயகத்தையும், ஜனநாயக நடவடிக்கைகளையும் மீண்டும் நிலைநிறுத்துவதன் மூலமே சாத்தியமாகும். அரசியலையும், சமூக ஜனநாயகத்தையும் ஒருங்கிணைப்பதன் மூலமேயாகும். ஜனநாயக புரட்சி என்பது அப்போதுதான் தொடர்ச்சியான புரட்சியாக மாறும்.

## ஜனநாயகத்தின் அரசியல் ரீதியான பிரயோசனம் என்ன?

பாராளுமன்ற ஜனநாயகம், தேர்தல் ஜனநாயகம், பிரதிநிதித்துவ ஜனநாயகம் போன்ற வடிவங்களில் நடைமுறையிலிருக்கும் ஜனநாயகத்திற்கு பல்வேறுவிதமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. தீவிர இடதுசாரி சக்திகள் முன்வைக்கின்ற பிரதானமான விமர்சனம் என்னவென்றால் பாராளுமன்ற ஜனநாயகம் என்பது முதலாளித்துவ வர்க்கத்திற்கு இலாபத்தை பெற்றுக்கொடுக்கும் அதே நேரத்தில், ஒடுக்கப்பட்ட மக்களை ஏமாற்று வதற்காக கடைப்பிடிக்கும் ஒரு தந்திரோபாயமே, பாராளுமன்ற ஜனநாயகம் என்பதாகும் என்ற விமர்சனமாகும். “பாராளுமன்றம் கள்ளர் குகையாகும்” என்ற ஒரு சொல்லாடல் இலங்கையில் ஒரு காலத்தில் இருந்தது. இந்த விமர்சனத்தின் அடிப்படையில் தேர்தல் என்பது தலைவலிக்கு தலையணையை மாற்றுவதற்கு ஒப்பான ஒரு நிகழ்வாகவே எடுத்துக்காட்டப்பட்டது.

தேர்தல் ஜனநாயகம் என்பது “தட்டு மாறும் முறையை ப் போன்றது” என்ற மிக ஜனரஞ்சகமான விமர்சனம் முன்வைக்கப்பட்டது.. பாராளுமன்ற ஜனநாயகம் தொடர்பாக பொதுவாகவும், பாராளுமன்ற ஜனநாயக நடைமுறை தொடர்பாக விசேடமாகவும் மக்கள் மத்தியில் காணப்படும் வெறுப்பும், நம்பிக்கையீனமும் இதில் நேரடியாக வெளிப்படுகின்றது. இவ்வாறான ஒரு பின்னணியில் ஜனநாயக அரசியலின் பெறுமதியையும், அதன் மதிப்பையும் சுட்டிக்காட்ட முடியுமா? நாம் ஏன் ஜனநாயகத்தை மதிக்க வேண்டும்? போன்ற கேள்விகளை இப்புத்தகத்தில் நாம் ஏற்கவே பார்த்திருக்கின்றோம். அந்தக் கேள்விக்கு மீண்டும் சென்று ஜனநாயகம் தொடர்பான எமது கலந்துரையாடலை நிறைவு செய்வோம்.



நவீன ஜனநாயக அரசியல், முதன் முதலில் ஐரோப்பாவில் தொடங்கியது, முதலாளித்துவ அரசியலின் ஒரு மாற்றுக் கருத்தாகவாகும். ஒரு அரசியல் முறைமை என்ற அடிப்படையில் ஜனநாயகம் முதலாளித்துவ

வர்க்கத்தினரின் பிடிகளுக்குள் கட்டுண்டு இருந்தது. அதே நேரத்தில் இதனால் இன்னுமொரு விடயமும் நடந்தது. அதாவது சமூகத்தில் இருந்து ஒடுக்கப்பட்ட புறம் தள்ளப்பட்ட சுரண்டலுக்குட்படுத்தப்பட்ட, சமூகத்தில் எந்தவித அதிகாரமுமற்ற சமூக வர்க்கத்தினர்களும், சக்திகளும், அரசியல் விடுதலைக்காக போராடிய போது, அவர்களின் அடிப்படையில் ஜனநாயகத்திற் காகவே போராடியுள்ளார்கள் என்பதாகும். தொழிலாளர் வர்க்க இயக்கங்கள், பெண் உரிமை அமைப்புக்கள், ஒடுக்கப்பட்ட மக்களின் சாதியுரிமை அமைப்பு க்கள், போன்ற அமைப்புக்கள் எல்லாம், வரலாறு முழுதும் நடத்திய போராட்டங்கள் அத்தனையும், ஜனநாயகத்துக்கான போராட்டங்களில் ஒரு பகுதியேயாகும்.

ஜனநாயகம் இன்று கேள்விக்குறியாக இருப்பதற்கான காரணம் அது அரசஅதிகாரம், வர்க்கஇன ஆதிக்கத்தின் ஊடகமாக மாறிப்போயிருப்பதாகும் அரசியல் நிறுவனங்களினதும், அரசியல் சலாச்சாரத்தினதும் அழிவின், அதன் வீழ்ச்சியின் ஊடாக, ஜனநாயக நிறுவனங்களின் அழிவை நாம் காண்கின்றோம். ஜனநாயகத்தின் பயணத்தை தொடர்ச்சியாக ஜனநாயக ரீதியில் விமர்சனத்திற்கு உட்படுத்துவதும், ஜனநாயகத்தை தொடர்ந்து ஜனநாயகப்படுத்தும் வழிமுறைகளுக்கு உட்படுத்துவதும், ஜனநாயகத்தின் நீண்டகாலத்திற்கும், நிலைத்திருப்பிற்கும் அத்தியவசியமாகும். அநேகமான நேரங்களில் இதனை நடைமுறைப்படுத்தக் கூடியவர்கள் அதிகார அமைப்புக்களால் புறந்தள்ளப்பட்ட, சமூக அரசியல் விடுதலையை எதிர்பார்க்கும் சமூக பிரிவினர்களாவர். ஜனநாயகத்தின் அருமை தெரிந்தவர்கள் அதனை அனுபவிப்பவர்களும் அல்லது அதனால் பெரிதும் நன்மை அடைபவர்களுமான வசதி படைத்தவர்கள் அல்ல ஜனநாயகம் மறுக்கப்பட்டவர்களுக்கே ஜனநாயகத்தின் அருமை தெரியும்.

ஜனநாயகத்தில் பல பின்னடைவுகளும், திரிவுபடுத்தல்களும் ஏற்பட்டன. ஆயினும் அது இன்றும் மனித இனத்திற்கு நனமைகளைப் பெற்றுத்தரும் ஒரு தத்துவமாகும், சிறந்த நடைமுறையுமாகும். இந்நூல் முழுவதும் அவ்வித நோக்கே வெளிப்படுவதைக் காணலாம். நூலின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளது போல் ஜனநாயகம் என்பது ஒன்றல்ல. அது பலவாகப், பலவிடயங்களை உள்ளடக்கி நிற்கிறது. ஜனநாயத்தை ஒரு நோக்குமுறை, ஒரு தத்துவம், ஒரு கருத்து, மக்களை ஆளும் சட்டமுறை, சமூக அரசியல் நடைமுறை, அரசிய கலாசாரம், கருத்துக் கட்டமைப்பு தனிநபர், சமூகப் பார்வை, சமூக அரசியல் விடுதலைக்கான எதிர்கால நோக்கு எனப் பலவாறாக விளக்கலாம் சமூக எதிர்பார்ப்புக்களை உருவாக்கும் சிறந்த மாற்றுத்தத்துவமாகவும் இதனைக் கொள்ளலாம்.

எமது சமூகத்தில் ஜனநாயகத்தினால் நாம் பெற்றுக்கொண்ட சிறந்த பயன்களிலிருந்தும் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்தும் புரிந்து கொள்வது என்னவென்றால் ஐரோப்பாவிலிருந்து எமது நாட்டிற்கு ஜனநாயகம் கொண்டுவரப்பட்டிருந்தாலும், எமது நாட்டு மக்களும், சமூகங்களும் அதனை சிறப்பாக இறுகப்பற்றிக் கொண்டுள்ளார்கள் என்பதுதான். ஜனநாயகம் இன்று அரசியல் பிரமுகர்களினதும் தொழில்சார் நிபுணர்களினதும் உடைமை அன்று சாதாரண பொதுமக்களே ஜனநாயகத்தை தமக்கே சொந்தமானதாக இறுகப் கொண்டுள்ளார்கள். ஒரு வகையில் ஜனநாயகம் என்பது முற்றுப் பெறாத அல்லது முடிவடையாத சமூக எதிர்பார்ப்பாகும். இன்னொரு வகையில் ஜனநாயகம் என்பது அடிக்கடி புத்தாக்கம் பெற்றுள்ள ஒரு அரசியல் கருத்தாகும்.

கலைச்சொல்லகராதி

இப்பிரசுரத்தில் உபயோகிக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் சொற்பதங்களுக்கு பொருத்தமான ஆங்கிலப்பதங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

சர்வதிகார / எதேச்சதிகார ஆட்சி
கொடுங்கோல் ஆட்சி - Authoritarian Regime
ஆட்சி / ஆளுகின்ற - Governnance
நேரடி ஜனநாயகம் - Direct Democracy
ஒழுங்கு முறை / விதிமுறை ஜனநாயகம்- Procedural Democracy
ஜனநாயகம் - Democracy
குழு உரிமை - Group Rights
ஜனநாயகத் தன்மை}
ஜனநாயகப் பண்பாடு}
குணாம்சரீதியிலான ஜனநாயகம்} - Quality of Democracy
சமூக அடிப்படை வாதம்
சமூக வாதம் - Communitarianism
ஜனநாயகக் குறைபாடுகள் }
ஜனநாயகக் இடைவெளிகள} - Democratic Deficits
முதலாளித்துவ ஜனநாயகம் }
பூர்சுவா ஜனநாயகம் } - Bourgeois Democracy

பிரதிநிதித்துவ ஜனநாயகம் - Representative Democracy

பெரும்பான்மை ஜயநாயகம் - Majoritarian Democracy
பெரும்பான்மை சமூக ஆதிக்க ஆட்சி - Tyranny of the Majority

33

தாராள ஜனநாயகம் }
லிபரல் ஜனநாயகம் } - Liberal Democracy

கூட்டணி ஜனநாயகம் }
கூட்டமைப்பு ஜனநாயகம்} - Consociational Democracy

தாராள பெண்ணியம்
தாராள பெண்ணியவாதம்
லிபரல் பெண்ணியவாதம் - Liberal Feminism

உடன்பாடின்மை
இணக்கமின்மை - Dissent

இணக்கப்பாடின்மைகான உரிமை}
உடன்பாடின்மைக்கான உரிமை - Right of Dissent

சாராம்ச ரீதியான ஜனநாயகம்
தன்மை ஜனநாயகம் - Substantive Democracy

பெண்ணியம் }
பெண்ணியவாதம் } - Feminism

சமூக ஒப்பந்தம் - Social Contract

சமூக மூலதனம் - Social Capital

சமூக உடமை}
பெண்ணியவாதம் }
சமூகவாத பெண்ணியம் } - Socialist Feminism

சமத்துவம் - சர்வசமம் - Equality

கழக ஜனநாயகம் }
அல்லது சங்கங்களின்
ஜனநாயகம் - Associational Democracy

சிவில் சமூகம் - Civil Society

வரையறுக்கப்பட்ட அரசாங்கம் - Limited Government

ஜனநாயகத்தில் பல பின்னடைவுகளும், திரிவுபடுத்தல்களும் ஏற்பட்டன. ஆயினும் அது இன்றும் மனித இனத்திற்கு நன்மைகளைப் பெற்றுத் தரும் ஒரு தத்துவமாகும், சிறந்த நடைமுறையாகும். இந்நூல் முழுவதும் அவ்வித நோக்கே வெளிப்படுத்துவதைக் காணலாம். நூலின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளது போல் ஜனநாயகம் என்பது ஒன்றல்ல. அது பலவாகப் பல விடயங்களை உள்ளடக்கி நிற்கிறது. ஜனநாயகத்தை ஒரு நோக்குமுறை, ஒரு தத்துவம், ஒரு கருத்து, மக்களை ஆளும் சட்டமுறை, சமூக அரசியல் நடைமுறை, அரசியல் கலாசாரம், கருத்துக் கட்டமைப்பு தனிநபர், சமூகப் பார்வை, சமூக அரசியல் விடுதலைக்கான எதிர்கால நோக்கு எனப் பலவாறாக விளக்கலாம். சமூக எதிர்ப்பார்ப்புகளை உருவாக்கும் சிறந்த மாற்றுத் தத்துவமாகவும் இதனைக் கொள்ளலாம்.

எமது சமூகத்தில் ஜனநாயகத்தினால் நாம் பெற்றுக் கொண்ட சிறந்த பயன்களிலிருந்தும் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்தும் புரிந்து கொள்வது என்னவென்றால் ஐரோப்பாவிலிருந்து எமது நாட்டிற்கு ஜனநாயகம் கொண்டுவரப்பட்டிருந்தாலும், எமது நாட்டு மக்களும் சமூகங்களும் அதனை சிறப்பாக இறுகப் பற்றிக் கொண்டுள்ளார்கள் என்பதுதான். ஜனநாயகம் இன்று அரசியல் பிரமுகர்களினதும், தொழில்சார் நிபுணர்களதும் உடைமை அன்று. சாதாரண பொதுமக்களே ஜனநாயகத்தை தமக்கே சொந்தமானதாக இறுகப் பற்றிக் கொண்டுள்ளார்கள். ஒரு வகையில் ஜனநாயகம் என்பது முற்றுப் பெறாத அல்லது முடிவடையாத சமூக எதிர்ப்பார்ப்பாகும். இன்னொரு வகையில் ஜனநாயகம் என்பது அடிக்கடி புத்தாக்கம் பெற்றுவரும் ஒரு அரசியல் கருத்தாகும்.

ISBN 978-955-0762-20-0
9 789550 762200

SSA SOCIAL SCIENTISTS' ASSOCIATION
345/18A, Kuruppu Lane, Colombo 08
Tel:- 0112 250 1339
Email :- ssalanka12@gmail.com
RS. 150/-